பங்கேற்போம்! உரிமையை நிலைநாட்டுவோம்!!

ARUNODHAYA Children Sangam

அருணோதயா குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பு


*தனிச்சுற்றுக்கு மட்டும்

# சிட்டெறும்பு பேசுது

உயிர் : 01
குரல் : 01

ஏப்ரல் 2023 - செப்டம்பர் 2023

மாநாடு 2023
சிறப்பு மலர்



# இணையதளப் பாதுகாப்பு எங்கள் உரிமை

அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம்



**அன்புக் குழந்தைகளே...**



அனைவருக்கும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

நீண்ட இடைவெளிக்குப்பின் **சிட்டெறும்பு பேசுது** இதழ் வெளிவருவதில் மிகுந்த மகிழ்ச்சி. அனைத்து குழந்தைகளுக்கும் அனைத்து உரிமைகளும் கிடைக்க வேண்டும் என்ற உரிமைப் பயணத்தில் அருணோதயா, குழந்தை பங்கேற்பு உரிமையை மையமாக வைத்து செயல்படுகின்றது.

குழந்தை பங்கேற்பின் ஓர் அம்சமாகக் குழந்தைகள் தங்கள் கருத்தை வெளிப்படுத்த, குழந்தைகளே தயாரிக்கும் பத்திரிக்கைதான் இந்த **சிட்டெறும்பு பேசுது**. இதன் மூலம் குழந்தைகள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதுடன் எழுதுதல், கவிதை, வரைதல் மற்றும் அவர்களது படைப்பாற்றல் திறனை வளர்க்கும் ஒரு வழியாகவும் அமைந்துள்ளது.

புத்தாக்கம் பெற்று வெளிவரும் இந்த முதல் இதழ் அருணோதயா குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பின் மாநாடு 2023 - சிறப்பிதழாக வெளிவருவதில் இரட்டிப்பு மகிழ்ச்சி. 'இணையதளப் பாதுகாப்பு எங்கள் உரிமை' என்ற மிக முக்கியமான தலைப்பை நீங்கள் எடுத்துள்ளீர்கள். கொரோனா தொற்றுநோயின் ஒரு பாதிப்பு, குழந்தைகள் இணையதளத்திற்கு அடிமையாகும் சூழலை உருவாக்கியுள்ளது.

**குழந்தை பங்கேற்பின் ஓர் அம்சமாகக் குழந்தைகள் தங்கள் கருத்தை வெளிப்படுத்த குழந்தைகளே தயாரிக்கும் பத்திரிக்கைதான் இந்த சிட்டெறும்பு பேசுது**

கல்வி கற்பதற்காகப் பெற்றோர்களால் குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்ட திறன்பேசி எனப்படும் ஸ்மார்ட்போன், அவர்களை இணையதளத்திற்கு அடிமை ஆக்கியுள்ளது. இணையதள விளையாட்டு, இன்ஸ்டாகிராம், முகநூல் போன்றவை குழந்தைகளுக்கு எதிரான வன்முறையை அதிகரித்துள்ளது. குழந்தைகளின் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ளது. அருணோதயா குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பின் உறுப்பினரான நீங்கள் இதனை உணர்ந்து இதற்கான விழிப்புணர்வை உருவாக்கவும், தடுப்பதற்கான வழிமுறைகளை வெளிப்படுத்தவும் பல முயற்சிகளை எடுத்துள்ளீர்கள். அதில் வெற்றியும் கண்டுள்ளீர்கள். இதன் முத்தாய்ப்பாக இந்த மாநாட்டை நடத்துகின்றீர்கள். இந்த மாநாடு வெற்றி பெற எனது வாழ்த்துக்கள்.

**சிட்டெறும்பு பேசுது** இதழ் மீண்டும் வெளிவரவேண்டும் என ஆர்வம் காட்டிய விதை நெல் உறுப்பினர்களுக்கு நன்றி. இளம் எழுத்தாளர் பயிற்சியை சிறப்பாக முன்னெடுத்து நடத்தி, இதழ் வெளிவருவதற்கு குழந்தைகளுடன் பயணிக்கும் மூத்த பத்திரிகையாளரும், வாலு டிவியின் நிறுவனரும், இந்த இதழின் கௌரவ ஆசிரியருமான திரு. மோ.கணேசனுக்கு நன்றி. மேலும் இந்த பயிற்சியில் கருத்தாளர்களாகப் பங்கேற்று பல தகவல்களை அளித்து குழந்தைகளின் படைப்பற்றல் திறனை வளர்த்த முனைவர் தங்க.ஜெய்சக்திவேல், திரு. முத்துக்குமார் அவர்களுக்கும் எங்கள் நன்றி.

இந்த இதழில் மிக ஆர்வமுடன் கட்டுரை, கதை, கவிதை, உரையாடல், ஓவியம் என பல்வேறு படைப்புகளை அளித்துள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் எனது வாழ்த்துக்கள். முக்கியமாக ஆசிரியர் குழுவில் இருக்கும் அனைத்துக் குழந்தைகளும் மிக ஆர்வமுடன் இந்த இதழ் உருவாக்கத்தில் பங்கேற்றுள்ளீர்கள்.

அருணோதயா பணியாளர்கள் மிகுந்த முயற்சி எடுத்து குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டி, அவர்களது படைப்பாற்றல் திறனை வெளிக்கொணர்ந்துள்ளீர்கள். உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள். முக்கியமாக திருமதி செல்வி, குழந்தை பங்கேற்பு கருத்தியல் வழிநடத்துநர் அவர்களுக்கு எனது சிறப்பு பாராட்டுக்கள்.

குழந்தை பங்கேற்பை உறுதி செய்வோம்! குழந்தை உரிமையை நிலைநாட்டுவோம்''

**முனைவர் வர்ஜில் டி சாமி**
**இயக்குநர், அருணோதயா**



**சிட்டெறும்பு பேசுது**
உயிர்: 01 | குரல்: 01
ஏப்ரல் 2023 - செப்டம்பர் 2023

**ஆசிரியர்கள்**
L. யுவராணி, H. யுவஸ்ரீ

**இணை ஆசிரியர்கள்**
S. ஜிஷ்ணு
K. நிஷாந்த்
G. விநாயகமூர்த்தி

**உதவி ஆசிரியர்கள்**
G. லக்ஷ்மிபிரியா
M. சுஹாஷினி
P. தமிழ்
S. லோகேஷ்
V. சுஜிதா
S. தங்கவித்யா
S. சக்தி முருகன்
R. கன்னியம்மா
M. யுவராஜ்

**நிருபர்கள்**
S. நிவிஸ்
A. ஹேமன்
V. நாகராணி
M. ஷாகினா
S. ஓவியா
D. ரொபினா
M. ஜெனிலியா

**ஓவியர்கள்**
C. ஜெகன்
S. ராபின்
V. நாகவள்ளி
R. தேவன்

**கௌரவ ஆசிரியர்**
திரு. மோ. கணேசன்
நிர்வாக இயக்குநர், வாலு டிவி

**நிர்வாகம்**
முனைவர் வர்ஜில் டி சாமி
நிர்வாக இயக்குநர், அருணோதயா

**ஒருங்கிணைப்பு**
திருமதி செ. செல்வி
குழந்தை பங்கேற்பு கருத்தியல் வழிநடத்துநர்

**வழிநடத்துநர்**
திரு. K.சுரேஷ்
விதை நெல் உறுப்பினர்

**என்னன்பு சிட்டெறும்புகளுக்கு...**

இந்த **சிட்டெறும்பு பேசுது** இதழ் மூலம் உங்களோடு இருப்பதில் பெருமகிழ்ச்சி. இதற்குக் காரணமாக இருந்த தோழர் சுரேஷ், அருணோதயா இயக்குநர் திருமதி. வர்ஜில், திருமதி. செல்வி ஆகியோருக்கு நன்றி.

கடந்த 20 ஆண்டுகளாக வடசென்னையில் இயங்கிக் கொண்டிருக்கும் அருணோதயா குழந்தைகள் சங்கம், 'நான் சிறுவயதில் இருந்தபோது எங்கள் ஊரில் இல்லையே' என்று நான் ஏங்கும் அளவிற்கு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அதில் ஓர் அங்கமாக நானும் இணைந்திருப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி. இந்த இதழில் இடம்பெற்றுள்ள படைப்புகளை உருவாக்கிய அத்தனைக் குழந்தைகளுக்கும் எனது பேரன்பு

இந்த ஆண்டு குழந்தைகள் மாநாட்டின் கருப்பொருளாக இணையதளப் பாதுகாப்பு என்பதை கையில் எடுத்திருக்கிறீர்கள். வெறும் வாயளவு பேச்சாக இல்லாமல் அதைச் செயலிலும் காட்டுங்கள்.

இணையத்தில் நன்மைகள் இருந்தாலும், ஸ்மார்ட் போன்கள் எனப்படும் திறன்பேசிகளில் இணைய வசதி கிடைத்த போதே பிரச்சனைகள் உருவாக ஆரம்பித்துவிட்டன. பெரியவர்களுக்கு அதில் தகவல் திருட்டு, பண இழப்பு, பண மோசடி, மிரட்டல்கள் எல்லாம் கொடூரமாக வர ஆரம்பித்துவிட்டன.

குழந்தைகளாகிய உங்களிடம் இருக்கும் நேரத்தை, அறிவை, விளையாட்டுத்திறனை இணையம் பறித்துள்ளது. தெருவில் ஓடியாடிய காலத்தைத் திருடிக்கொண்டு பப்ஜி, ப்ரீபயர், இன்ஸ்டா என பலவற்றை உங்களிடம் தந்துள்ளது. 'ஓரிடத்தில் உட்கார். என்னையே பார். என்னையே பயன்படுத்து. எனது அடிமை நீ!' என்பதுதான் இணையத்தின் மறுபக்கத்தில் உள்ள ஆபத்து.

போட்டோக்கள், வீடியோக்களைப் பகிர்ந்து லைக்குகளுக்கு ஆசைப்பட்டு பல குழந்தைகள் ஆபாச கும்பல்களிடம் சிக்கி சீரழிந்துள்ளனர். புதிதாக 'Deepfake' என்ற தொழில் நுட்பத்தால் உங்களின் போட்டோவை, வீடியோவை அப்படியே அசிங்கமாக மாற்ற முடியும். ஆகவே இணையத்தில் மிகுந்த எச்சரிக்கை தேவை. இணையம் கத்தி போன்றது. நல்லதுக்கு மட்டுமே பயன்படுத்துங்கள். அளவாகப் பயன்படுத்துங்கள். அதற்கு அடிமையாகி விடாதீர்கள். உங்கள் குழந்தைப் பருவத்தை தொலைத்துவிடாதீர்கள்.

புத்தகங்களைப் படியுங்கள், நிறைய எழுதுங்கள், நண்பர்களோடு மைதானத்தில் விளையாடுங்கள். உங்கள் மகிழ்ச்சி வானை எட்டட்டும்!

**மிக்க அன்புடன்**

**மோ.கணேசன்**
**கௌரவ ஆசிரியர்**









# எங்கள் அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் நடந்த நிகழ்வுகள் என்ன?

**CACS அருணோதயா குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பில் நடந்த நிகழ்வு**

ஜூன் 10 நெட்வொர்க் மீட்டிங் மற்றும் 2023 -2024 குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பு தேர்தல் நடத்துவதற்கான திட்டமிடல் நடைபெற்றது. தேசிய அளவு கலந்தாய்வுக் கூட்டத்தில் நடந்த நிகழ்வை தேன்மொழி அவர்கள் பகிர்வு செய்தார்கள். விதைநெல் குழுவிலிருந்து ஜெயகுமார் அவர்கள் போதை விழிப்புணர்வு குறித்த ஓவியப் போட்டியில் 3-ஆம் பரிசைப் பெற்றார். அவரை இயக்குநர் அவர்கள் குழந்தைகள் சார்பில் கௌரவித்தார்

**2023-ஆம் ஆண்டில் நடந்த தேர்தலின் விவரம்**

ஜூலை 9 அன்று அருணோதயா குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பின் தேர்தல் நடைபெற்றது. 2022 - 2023 ஆம் ஆண்டில் குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பில் இருந்த 9 உறுப்பினர்கள் இந்த தேர்தலை தலைமை ஏற்று நடத்தினார்கள். அந்த ஒன்பது உறுப்பினர்களில் ஓர் உறுப்பினராக, துணைச்செயலாளராக நான் பங்கேற்று தேர்தலை வழிநடத்தினேன். அந்தத் தருணம் எனக்கு மறக்க முடியாத நிகழ்வாகவும், தைரியமாகப் பேசுவதற்கான வாய்ப்பாகவும் அமைந்தது. 2023 - 2024 தேர்தலில் 25 வேட்பாளர்கள் நிறுத்தப் பட்டு, அவர்களுக்கு வாக்களிக்க ஒவ்வொரு பகுதியில் இருந்தும் குழந்தைகள் வரவேற்கப்பட்டு வேட்பாளர்களுக்கு வாக்களிக்கப்பட்டது.

இதில் அதிக வாக்கு பெற்ற 9 வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்கு அருணோதயா குழந்தைகள் சங்க செயற்குழு உறுப்பினர்களாகப் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**அனைத்து மண்டலங்களிடையே நடந்த நிகழ்வுகள்**

**ஜூன் 12:** குழந்தை உழைப்பு எதிர்ப்பு தினத்தன்று எங்கள் பகுதி குழந்தைகள் அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தினோம்.

**ஜூலை 16:** 2004-ஆம் ஆண்டு கும்பகோண தீ விபத்தில் இறந்த குழந்தைகளுக்கு அருணோதயா குழந்தைகள் சங்க குழந்தைகள் அனைவரும் மெழுகுவர்த்தி ஏற்றி நினைவு அஞ்சலி செலுத்தினோம்.

**ஜூன் 26:** போதைப் பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு அனைத்து மண்டலங்களுக்கு இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினோம்.

**அக்டோபர் 11:** தேசிய பெண் குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது.

வாழ்க்கைத் திறன் கல்வி மற்றும் கல்வி ஊக்குவிப்புப் பயிற்சிகளும் நம் அருணோதயா குழந்தைகள் சங்க உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. இதில் 1000க்கும் மேற்பட்ட குழந்தைகள் பயிற்சி பெற்றனர்.

**திறன்கள் மேம்பாட்டில் நடந்த பயிற்சிகள்**

கொருக்குப்பேட்டை மண்டலத்தில் சிலம்பப் பயிற்சி நடைபெறுகின்றது. 35 குழந்தைகள், மாநில அளவிலானப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்று முதல் பரிசு பெற்றனர்.

எண்ணூர் மண்டலத்தில் பரத நாட்டியப் பயிற்சி நடைபெறுகின்றது. கொருக்குப்பேட்டை மற்றும் திருவொற்றியூர் மண்டலங்களில் பிரிஸ்பீ விளையாட்டு பயிற்சி நடைபெற்று வருகின்றது. இதில் 40 குழந்தைகள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**அருணோதயா குழந்தைகள் சங்கத்தின் மாதக் கூட்டத்தின் தலைப்பு**

**ஜூன்:** தன்னை அறிதல் என்ற தலைப்பில் கூட்டம் நடைபெற்றது

**ஜூலை**: பலம் என்ற தலைப்பில் கூட்டம் நடைபெற்றது.

**ஆகஸ்ட்**: பலவீனத்தை பலம் ஆக்குவது எப்படி என்ற தலைப்பில் கூட்டம் நடைபெற்றது.

**செப்டம்பர்**: எதை நீ தேடுகிறாயோ அது உன்னைத் தேடுகிறது என்ற தலைப்பில் கூட்டம் நடைபெற்றது.

**சங்கக் கூட்டத்தில் நடக்கும் நிகழ்வு**

மாதம் மாதம் ஒவ்வொரு தலைப்பில் கூட்டம் நடைபெறுகின்றது அந்தக் கூட்டத்தில் தலைப்புக்கான நோக்கத்தை முதலில் கூறுவார்கள். அந்த தலைப்புக்கான விளையாட்டை விளையாடுவார்கள். பின்பு கதைகள், நன்மைகள் மற்றும் தீமைகள் என்ன என்பதைக் கூறி அந்தக் கூட்டத்தை நிறைவு செய்வோம்.

**பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பு**

மே 18, 19 ஆகிய தேதிகளில் மதுரை மாவட்டத்திலுள்ள வாடிப்பட்டி என்னும் கிராமத்தில் பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்புக் கூட்டம் நடைபெற்றது. மாநிலக் கல்விக்கொள்கை குறித்து குழந்தைகள் கலந்துரையாடினார்கள் எங்கள் அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் இருந்து கு. காவ்யா, சந்தோஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**ஒரு நாள் திட்டமிடல் பயிற்சி**

மே 20 முதல் மே 30-ஆம் தேதி வரை ஒரு நாள் திட்டமிடல் பயிற்சி நடைபெற்றது. அந்த பயிற்சியில் இணையதளப் பாதுகாப்பு என்றால் என்ன? இணையத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? இணையத்தில் ஏற்படும் நன்மைகள் தீமைகள், அவற்றில் ஏற்படும் விளைவுகள் என்ன என்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் பங்கேற்றனர்.

**இளம் விஞ்ஞானிகள் கண்காட்சி**

ஜூன் 3-ஆம் தேதி இளம் விஞ்ஞானிகள் கண்காட்சி நடைபெற்றது. இதில் குழந்தை விஞ்ஞானிகள் உருவாக்கிய 15 புதிய கண்டு பிடிப்புகளை கண்காட்சியில் காட்சிப்படுத்தினர். இந்த கண்காட்சியில் இருநூறுக்கும் மேற்பட்ட குழந்தைகள் பங்கேற்றனர்.



**L. யுவராணி,**
**11-ஆம் வகுப்பு**





# குழந்தைகள் நகரசபை



அருணோதயா குழந்தைகள் சங்கக் குழந்தைகள் உள்ளாட்சித் துறை கட்டமைப்புகளை புரிந்து கொள்வதற்காக அருணோதயா உதவியுடன் சென்னை மாநகராட்சி கட்டமைப்பு, உள்ளாட்சி தேர்தல், நிலைகுழுக்கள் போன்றவற்றின் செயல்பாடுகள் குறித்த பயிற்சிகள், வழிகாட்டுதல்கள் பெற்று குழந்தைகளால் குழந்தைகளின் குரல் கேட்கவும், கேட்டு செயல்படவும் உருவாக்கப்பட்டதுதான் குழந்தைகள் நகரசபைக்கான கட்டமைப்பு. திருவொற்றியூரில் உள்ள 10 வார்டுகளில் 8 முதல் 18 வயது வரை உள்ள குழந்தைகளில் இருந்து குழந்தைகளே தேர்தல் நடத்தி, வார்டுக்கு 10 குழந்தை கவுன்சிலர் வீதம் 100 குழந்தை கவுன்சிலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த குழந்தை கவுன்சிலர்கள் மூலம் குழந்தைகள் நகரசபைக் கூட்டம் வருடத்திற்கு 4 முறை நடத்தப்படுகிறது. (ஜனவரி -24, ஏப்ரல்-30, ஆகஸ்ட் -15, நவம்பர் -14)

**குழந்தை கவுன்சிலரின் அனுபவம்**

எனது பெயர். கு. மனோஜ், திருவொற்றியூர் மண்டலம் -1, வார்டு 7-இல் குழந்தை கவுன்சிலராக கடந்த 2 வருடங்களாக இருந்து வருகிறேன். ஜூன் 12 ஆம் தேதி, ஆகஸ்ட் 15ஆம் தேதிகளில் குழந்தைகள் நகரசபைக் கூட்டம் நடைபெற்றது. 3,6,7,9,37,38, 41,47,52,53 ஆகிய 10 வார்டுகளில் குழந்தைகள் நகரசபைக் கூட்டம் நடத்தபட்டது.

அரசு ஆளுகையில் குழந்தைகள் பங்கேற்பானது, குழந்தைகள் நகரசபைக் கூட்டங்களின் மூலம் நிறைவேறி வருகிறது.

**நகரசபைக் கூட்டங்களினால் ஏற்பட்ட மாற்றங்கள்**

- மண்டலம் -1, வார்டு 7-இல் உள்ள குழந்தைகள் போக்குவரத்து வசதி இன்றி பள்ளிக்குச் செல்ல மிகவும் கஷ்டப்பட்ட நிலையில், நகரசபை கூட்டத்தில் மனு கொடுத்ததின் விளைவாக ரயில்வே பாதைக்குக் கீழே சுரங்கப்பாதை அமைக்கும் பணி துவங்கியது. ஆனால் காலதாமதம் ஆனது. எனவே ஆகஸ்ட் - 15 அன்று நடைபெற்ற நகரசபைக் கூட்டத்தில் எங்களின் முக்கிய கோரிக்கையாக சுரங்கம் தோண்டும் பணியை விரைவாகத் துவங்க வேண்டும் என்று குரல் கொடுத்தோம். இப்போது சுரங்கம் தோண்டும் பணி அங்கே துவங்கியுள்ளது.
- மண்டலம் 1, வார்டு 6-இல் குழந்தைகள் நகர சபைக் கூட்டத்தில் கொடுத்த மனுக்களினால், சென்னை மாநகராட்சியின் மாமன்ற கூட்டங்களில் பேசப்பட்டு, அதற்கான நிதி உதவிகள் பெறப்பட்டு, சாலை வசதி, தெரு விளக்குகள் சீரமைப்பு, கழிவு நீர், கால்வாய் தூர் வாருதல் போன்ற பணிகளைச் செய்ய முடிந்தது. மேலும் சென்னை மாநகராட்சி 6 வார்டு மாமன்ற உறுப்பினர், என்விரோ அமைப்பு, அருணோதயா இணைந்து குப்பைகளை தரம் பிரித்து குப்பைத் தொட்டிகளில் கொட்ட வேண்டும் என விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தினோம் .
- வார்டு 37-இல் ஆர் ஆர் பகுதியில் குழந்தைகளுக்கான பூங்கா சரி செய்து தரப்பட்டது. ஆசிரியர் பற்றாக்குறை பற்றி பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் பேசியதின் விளைவாக இரண்டு ஆசிரியர்கள் புதிதாக நியமிக்க பட்டுள்ளனர்.
- மண்டலம் - 4, வார்டு, 38-இல் அமைந்துள்ள பூங்கா, குழந்தைகள் விளையாடக் கூடிய சூழல் இல்லாமல் இருந்தது. நகரசபைக் கூட்டத்தில் குழந்தைகள் மனு கொடுத்ததின் விளைவாக டென்னிஸ், கால்பந்து போன்ற விளையாட்டுகள் விளையாட இடம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. அங்குள்ள பட்டேல் நகர் உயர்நிலை பள்ளியில் குழந்தைகளுக்கு உயர்தர வசதியுடன் கூடுதல் வகுப்பறை கட்டப்பட்டது.

அனைத்துக் கூட்டங்களிலும் குழந்தைகள் கொடுத்த கோரிக்கைகள் சிறிதாக சிறிதாக நிறைவேறி வருகிறது.



**L. யுவராணி,**
**11-ஆம் வகுப்பு**



# வளர்ந்து வரும் சாதனையாளர்கள்

## அருணோதயா ஆவணப் படக்குழுவினர்



**லக்ஷ்மி பிரியா:** சங்கமித்ரா அக்கா! நீங்க அருணோதயா ஆவணப்படக் குழுவில் இருக்கீங்கதானே! சிட்டெறும்பு பேசுது இதழுக்காக உங்க அனுபவத்தை எங்களிடம் பகிர்ந்து கொள்ளுங்களேன்.

**சங்கமித்ரா:** ஓஓஓ... தாரளமாக..! நான், ஜெயகுமார், சாலமன், மகாலட்சுமி, ஸ்ரீநிவாசன், மதன், விக்னேஷ் ஆகியோர் இப்பொழுது ஆவணப்படக் குழுவில் தன்னார்வலராக உள்ளோம். ஆவணப் படக்குழு 2019-இல் துவங்கப்பட்டது. இணைய சந்திப்பின் மூலம் அருணோதயா குழந்தைகள் சங்க குழந்தைகளுக்கு ஆவணப்படத் தயாரிப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி திரைப்பட உதவி இயக்குநர் திரு. அருள் என்பவர் மூலம் அளிக்கப்பட்டது. கொரோனா சிறிது சிறிதாக சரியானவுடன் திரு. அருள் அவர்கள் ஆவணப்படக் குழுவினரைச் சந்தித்து நேரடி பயிற்சி நடத்தினார். உண்மைச் சம்பவத்தை வைத்து ஆவணப்படம் எப்படி உருவாக்க வேண்டும் என்பதையும் காணொளி மூலம் நிழற்படம் எப்படி உருவாக்க வேண்டும் என்பதையும் தெளிவாகக் கற்றுக்கொடுக்கப்பட்டது.

**லக்ஷ்மி பிரியா:** கேட்கவே வியப்பாக உள்ளது அக்கா. மேலும் சொல்லுங்க

**சங்கமித்ரா:** அடுத்தகட்ட பயிற்சியில் ஒளிப்படக் கருவியை (Camera) எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதையும், திரைப்படம் எப்படி உருவாகிறது என்பது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் நான்கு மண்டலத்தைச் சேர்ந்த குழந்தைகள் பங்கு பெற்றார்கள். அருணோதயா குழந்தைச் சங்கத்தில் இருந்து வளர்ந்து, தற்போது இயக்குநராக மாறியுள்ள திரு. ஷெரிப் அவர்கள் ஆவணப்படக் குழுவினருக்கு பயிற்சி அளித்தார். இப்பயிற்சி எண்ணூர் தொன்போஸ்கோவில் இரண்டு நாட்கள் நடைபெற்றது. இதில் முதல் நாளில் தியரி, இரண்டாவது நாளில் பிராக்டிகல் வகுப்பும் நடைபெற்றது. இப்பயிற்சியின் மூலம் குழந்தைகள் ஆவணப்படக் குழுவாக உருவாகி, திட்டமிட்ட இருபதாம் ஆண்டு கொண்டாட்டத்தில் **கனவு நனவாகும் பயணம்** என்ற ஆவணப்படத்தை வெளியிட்டனர்.

ஆவணப்படக் குழுவினருக்குத் தேவையான ஒளிப்படக் கருவி, கணினி அமைப்பு அனைத்தையும் நம்முடைய இயக்குநர் அவர்கள் செய்து கொடுத்துள்ளார்கள். மேலும் அருணோதயா அலுவலகத்தில் எங்களுகென்று ஒரு அறை கொடுத்து ‘எடிட்’ செய்ய ஒரு கணினியும் கொடுத்துள்ளார்கள். ஆவணக் குழுவினர், அருணோதயாவின் எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் அதைக் காணொளியாகவோ அல்லது நிழற்படமாகவோ சமூக வலைதளத்தில் பதிவிட்டு வருகிறார்கள். அருணோதயா குழந்தைத் தொழிலாளர் மையத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளையும் ஆவணப்படுத்தி அருணோதயா யூ டியூப் சேனல், இன்ஸ்டாகிராமில் பதிவிட்டு வருகின்றோம்.


**லக்ஷ்மி பிரியா:** இந்தப் பயிற்சியின் மூலம் உங்கள் தனிப்பட்ட வாழ்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா அக்கா?

**சங்கமித்ரா:** நிச்சயமாக மாற்றம் ஏற்பட்டுள்ளது. தனியாக சேனல் வைத்து நடத்தியும் வருகின்றோம். மதன் எடிட்டிங் தொழில் சார்ந்த பணியில் சேர்ந்துள்ளார். மஹாலக்ஷ்மி தனியாக சேனல் வைத்து நடத்துகிறார். ஸ்ரீநிவாசன் குறும்படம் எடுத்து பரிசு பெற்றுள்ளார்.

**லக்ஷ்மி பிரியா:** நன்றி அக்கா. உங்கள் அனுபவம் மற்ற குழந்தைகளுக்கு பயனுள்ளதாக இருக்கும்.



**G.லக்ஷ்மிபிரியா,**
**8-ஆம் வகுப்பு**




# இணையதளப் பாதுகாப்பு எங்கள் உரிமை

நாம் இணையதளத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இணையதளம் இல்லையெனில் நாம் இல்லை என்ற அளவிற்கு நாம் இணையதளத்தை அதிகம் பயன்படுத்தி வருகிறோம். இணையம் என்பது உலக அளவில் பல கணினி வலையமைப்புகளின் ஒன்றிணைந்த பெரும் வலையமைப்பைக் குறிக்கும்.

இணையம் என்பது நவீன தொழில்நுட்பத்தின் கண்டுபிடிப்பே. பெரிய மற்றும் சிறிய செய்திகள் மற்றும் தகவல்களை முன்பை விட வேகமாக அனுப்ப நம்மால் முடிகிறது. இணையத்தை உள்ளடக்கிய பகுதியைக் கணக்கிடுவது மிகவும் கடினம்.

ஒவ்வொரு வினாடிக்கும் மக்கள் ஏதேனும் பிரச்சனைகள் அல்லது தேடலுக்காக அதனுடன் இணைந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், எல்லா விஷயங்களைப் போலவே இணையமும் மக்களின் வாழ்க்கையில் சில நல்ல மற்றும் கெட்ட விளைவுகளை ஏற்படுத்துகிறது. அதை முக்கியமாக அறிந்து கொள்ள வேண்டும்.

### இணையத்தின் நல்ல விளைவுகள்

இணையத்தால் முடிந்த அனைத்து விஷயங்களையும் நல்ல விஷயங்கள் என்று கூறமுடியாது அல்லவா? இந்த இணையம் நம் வாழ்க்கையை எளிதாகவும் சில நேரங்களில் பாதுகாப்பாகவும் இருக்க உதவுகிறது. குழந்தைகள் படிக்கவும், தெரியாதவற்றைத் தெரிந்துகொள்ளவும் உதவுகிறது. செய்திகளை எல்லோரும் விரைவில் தெரிந்து கொள்ளவும் உதவுகிறது.

### இணையத்தின் மோசமான விளைவுகள்

இணையத்தின் காரணமாக வரும் பிரச்சனைகள் தனக்கும், தம்மைச் சுற்றி உள்ளவர்களுக்கும் சிரமத்தை யும் ஆபத்தையும் ஏற்படுத்துகின்றன. இணையத்தைத் தேவைக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும். எந்த சிக்கலிலும் நாம் மாட்டிக்கொள்ளாமல் இருக்க வேண்டும்.



உலகில் எந்த மூலையிலும் இருந்தாலும் இந்த இணையதளத்தை எளிதாக நம்மால் பயன்படுத்த முடிகிறது. இன்றைய உலகில் இணையதளம் இல்லாமல் நம் வாழ்க்கையைக் கற்பனை செய்து பார்க்க முடியாது.

### இணையத்தின் பயன்பாடுகளைப் பற்றி அறிவோமா?

இணையம் தோன்றியதில் இருந்து நாள்தோறும் வளர்ந்துகொண்டே இருக்கிறது. மேலும், இந்தப் பயணத்தின்போது இணையம் பல விஷயங்களை ஏற்றுக் கொண்டது. பெரிய மற்றும் சிறிய விஷயங்கள் அனைத்தும் இணையதளத்தில் கிடைக்கின்றன. உங்களுக்கு தேவையான கட்டுரை அல்லது பொருட்கள் இன்னும் பல விஷயங்களை இணையத்திலிருந்து பெறலாம்.

இணையத்தில் நீங்கள் கற்றுக்கொள்ளலாம், கற்பிக்கலாம், ஆராய்ச்சி செய்யலாம், எழுதலாம், மின்னஞ்சல் செய்யலாம். இணையதளத்தில் பல்வேறு விஷயங்களைச் செய்யத்தான் நாம் இணையத்தைப் பயன்படுத்துகிறோம்.

இணையம் இல்லாத காலத்தை விட, தற்போது இணையத்தின் காரணமாக நமது வாழ்க்கை வசதியாகிவிட்டது. முன்பெல்லாம் கடிதங்களை அனுப்புவதற்கும், பணம் எடுப்பதற்கும், பணம் செலுத்துவதற்கும், டிக்கெட்களை முன்பதிவு செய்வதற்கும் வரிசையில் நிற்க வேண்டும். ஆனால் இன்று இணையம் அனைவரிடமும் வந்தபிறகு இவை அனைத்தும் எளிதாகிவிட்டன. வரிசையில் நின்று நேரத்தை வீணடிக்க வேண்டியது இல்லை.


**இணையத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் டிம் பெர்னர்ஸ்- லீ. ஏனெனில் அவர் ஒவ்வொரு வலைத் தளத்திலும் பயன்படுத்தப்படும்** WWW (World Wide Web)**ஐ கண்டுபிடித்தார்.**


இணையதளத்தால் சில நிமிடங்களில் வேலைகளை முடிக்கலாம். இணையம் நம் வாழ்க்கையை எளிதாகவும், வசதியாகவும், மாற்றியது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அது பல பெரிய பிரச்சனைகளை ஏற்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. இணையத்திற்கு வேகமாக நாம் அடிமையாகி வருகிறோம். ஒரு நாள் அது நம் அடிப்படைத் தேவையாக மாறிவிடும்.

### இணையதளத்தில் செய்யக்கூடாத செயல்கள்

நம் சொந்த விசயங்களை பகிர்ந்து கொள்ளக் கூடாது. நம் நிழற்படங்களை முகநூல் மற்றும் வாட்சப்பில் பகிர்ந்து கொள்ளக் கூடாது. நமக்கு தெரியாதவர் மின்னஞ்சல் மற்றும் உள்ளீடுகளைத் திறந்து பார்க்கக் கூடாது. ஒருவர் நமக்கு பின்னால் இருக்கும்போது கடவுச்சொல் பயன்படுத்தக் கூடாது. கடவுச் சொல்லை யாரிடமும் பகிர்ந்து கொள்ளக் கூடாது. இணையதளத்தில் அடுத்தவர்களின் தனிப்பட்ட விஷயங்களில் ஆர்வம் காட்டக் கூடாது. சமூக வலைதளங்களில் கேலி, கிண்டல், ஆபாச வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது. சமூக வலைதளங்களில் அறிமுகமானவர்களை நேரில் சந்திக்கச் செல்லக் கூடாது. அதிகம் நேரம் இணையதளத்தைப் பயன்படுத்தக் கூடாது. அறிமுகம் இல்லாத நபரின் நட்பை ஏற்றுக்கொள்ளக் கூடாது. நம் முகவரி, நாம் போகும் இடம் குறித்த தகவல் இணையதளத்தில் பதிவிடக்கூடாது. இணையதளம் பயன்படுத்தும்போது ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் பெற்றோரிடம் சொல்ல வேண்டும்.

அறிமுகம் இல்லாதவர்களிடம் இருந்து வரும் லிங்கை திறக்கக்கூடாது. நாம் பயன்படுத்தும் அனைத்து சமூக வலைதளத்திலும் தடை (block) மற்றும் ரிப்போர்ட் என்ற இரண்டு விஷயங்கள் உள்ளது. அதை பயன்படுத்தி நாம் அந்த நபரை நம் இணையத்திலிருந்து விலக்கலாம். www.cyber crime.gov.in என்ற இணையதளத்தில் புகார் அளிக்கலாம். அவசியம் எனில் காவல் நிலையத்திற்கு போன் செய்து புகார் அளிக்கலாம்.





### சைபர் கிரைம் என்றால் என்ன?

சமூக வலைதளங்களில் ஒருவரை மறைமுகமாகவோ, நேரடியாகவோ துன்புறுத்தலுக்கு ஆளாக்குதல், சமூக வலைத்தளங்களில் அடுத்தவர் விவரங்களைத் திருடுதல், போன் மூலம் பணம் திருடுதல், பொய்யான தகவல்களைக் கொடுத்து குழந்தைகளை பாலியல் வன்முறை செய்தல், குழந்தைகளின் நிழற்படங்களைப் பகிர்தல், ஆபாச வீடியோக்களை அனுப்புதல், பிளாக்மெயில் செய்தல்.

### சைபர் கிரைம் வகைகள்

பாலியல் வன்முறை, இனக்கவர்ச்சி, ஆபாசப் படம், அதிகமாக உடல், மனம் பாதிப்பு, தற்கொலைக்கு தூண்டுதல், ஒழுக்கமின்மை.

### இணையதளக் குற்றங்களுக்காக ஏதேனும் சட்டங்கள் உள்ளதா?

2000 அக்டோபர் 17-ஆம்தேதி இந்திய நாடாளுமன்றத்தில் தகவல் தொழில்நுட்ப சட்டம் கொண்டுவரப்பட்டது. தகவல் தொழில்நுட்ப திருத்தச் சட்டம் 2008 டிசம்பர் 23 அன்று கொண்டு வரப்பட்டது.

### இந்தச் சட்டத்தில் உள்ள சில பிரிவுகள்

பிரிவு 67-ஏ-ன் கீழ் ஆபாசமான படங்களைப் பதிவிட்டால் 7 ஆண்டு சிறை விதிக்கப்படும். பிரிவு 67-ஏ-ன் கீழ் குழந்தை ஆபாசப் படம் மற்றும் குழந்தைகள் மீது வன்முறை செய்தால் ஏழு ஆண்டு கடுங்காவல் சிறை விதிக்கப்படும். பிரிவு 71ன் கீழ் இணையதளத்தில் பொறுப்பற்ற நடவடிக்கையில் ஈடுபடும் குற்றத்திற்கு மூன்று ஆண்டு சிறை. பிரிவு 70ன் கீழ் மற்றவர்களின் பாதுகாக்கப்பட்ட விஷயங்களை இணையதளம் மூலமாக கையாடுதல் குற்றத்திற்கு 10 ஆண்டு சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

இணையதளத்தை முறையாகப் பயன்படுத்துவோம். ஆக்கப்பூர்வமான செயல்களுக்குப் பயன்படுத்துவோம்.



H.யுவஸ்ரீ,
11-ஆம் வகுப்பு



K. நிஷாந்த்,
9-ஆம் வகுப்பு



சிறுகதை

# வெட்டுக்கிளியும் சருகுமானும்



அடர்ந்த காட்டில் விலங்குகள் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன.

அக்காட்டில் கூரன் என்கிற பெண் சருகுமானும், வாயாடி வெட்டுக் கிளியும் வாழ்ந்து வந்தன. கூரன் மிகவும் கூச்ச சுபாவம் உடையவள். ஒரு குட்டிப் பூனை அளவுதான் இருக்கும். ஒருநாள் மாலை நேரம் கூரன் ஓடையைத் தாண்டுவதும், குதிப்பதுமாக இருந்தது. அதன் பிறகு குறிஞ்சிப் புதர் அருகே இளைப்பாற வந்தது.

வாயாடி வெட்டுக்கிளி அதனிடம் பேசத் துவங்கியது. ''உன்னைப் பார்த்து வெகுநாட்கள் ஆகி விட்டதே. என்ன? இங்கும் அங்கும் அலைகிறாய்!'' என்றது. அதற்கு கூரன் ''என்னைத் துரத்திக்கொண்டு பித்தக்கண்ணு வருகின்றது'' என்றது. பித்தக்கண்ணு என்பது சிறுத்தை ஆகும். மரத்தின் அடியில் இருந்த குறிஞ்சிப் புதரில் பதுங்கிக் கொண்டது கூரன். வெட்டுக்கிளியைப் பார்த்து, ''பித்தக்கண்ணு வந்தால் என்னை காட்டிக் கொடுத்து விடாதே!'' என்றது.

வெட்டுக்கிளியும் ''காட்டிக்கொடுக்க மாட்டேன்'' என்று வாக்குறுதி அளித்தது. கூரனைத் தேடி குறிஞ்சி புதர் அருகே வந்த பித்தக் கண்ணுவை அருகில் பார்த்த வெட்டுக்கிளிக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.

பித்தக்கண்ணு வெட்டுக் கிளியைப் பார்த்து, ''கூரனைப் பார்த்தாயா?'' என்று கேட்டது. வெட்டுக்கிளியும் ''இல்லை'' என்று சொல்லிவிட்டது. இருந்தபோதிலும் வெட்டுக்கிளி மரக்கிளையின் மீது குதித்து குதித்து விளையாடியது. பித்தக்கண்ணுவிற்கு சந்தேகம் ஏற்படவே மரக்கிளையைச் சுற்றிச் சுற்றி வந்தது. முதல் நாள் இரவு அங்கே புனுகுப் பூனை தங்கி விட்டுச் சென்றதால் அதனுடைய நாற்றம் அடித்ததே தவிர, கூரனின் வாசம் அடிக்கவில்லை. பித்தக்கண்ணு வந்த வழியே திரும்பிப் போனது.

இதையெல்லாம் கவனித்த கூரன், 'கொடுத்த வாக்கை மறந்து தன்னை வெட்டுக்கிளி காட்டிக்கொடுக்கப் பார்த்தது. அதற்கு பாடம் புகட்ட வேண்டும்' என்று நினைத்து மரத்தை உலுக்கியது. வெட்டுக்கிளி தாவித் தாவிக் குதித்து பயந்து நடுங்கியது.

**கொடுத்த வார்த்தையைக் காப்பாற்றுவது நற்பண்புகளில் ஒன்று!**




G.விநாயக மூர்த்தி,
12 ஆம் வகுப்பு

# அருணோதயா நகரிலுள்ள பழங்குடியினரின் வாழ்க்கை!



**அருணோதயா நகர் எவ்வாறு உருவானது?**

**இருளர் மக்கள் ஆங்காங்கே தனித்தனியாக பிரிந்து வாழ்ந்து வந்தனர். முதன்முதலில் இவர்கள் வாழ்ந்த இடம் எண்ணூரில் உள்ள ஜோனகர் தோட்டம் சாலையோரம் மற்றும் சாந்தா திரையரங்கம் போன்ற சில இடங்களில் வசித்து வந்தார்கள். அந்த நேரத்தில் அருணோதயா இயக்குநர் வந்து அங்கே ஆதரவற்ற நிலையில் வசித்து வந்த இருளர் மக்களைச் சந்தித்து, அருணோதயா மூலமாக அவர்கள் வசிப்பதற்கான இடம் வாங்கி தந்தார்கள். இதற்குப்பிறகு மக்கள் தொடர்ந்து அங்கே வசிக்க ஆரம்பித்தனர்.**





### எங்களின் முன்னோர்கள் பற்றி

முன்பிருந்த காலத்தில் எங்கள் முன்னோர்கள் பாம்பு, உடும்பு போன்ற உயிரினங்களைப் பிடித்து அதன் மூலம் வரும் வருமானத்தை வைத்து வாழ்ந்தனர்.

### இருளர் மக்கள் தொழில்

இறால், மீன், நண்டு, மட்டி(சிப்பி) போன்றவற்றைப் பிடிக்கும் தொழில் முதன்மையாக இருக்கிறது. உச்சி வெயிலையும் மீறி வீசும் காற்று உடலை குளிர்ச்சி அடையச்செய்யும். இவற்றிற்கு இடையே பரி என்னும் பனை ஓலையை வாயில் கவ்விக்கொண்டு நீருக்குள் மூழ்குவதும், எழுவதுமாக சில பெண்கள் இறால் மீன் பிடிப்பார்கள். இந்தத் தொழில் உயிரைப் பணயம் வைத்து செய்வது ஆகும் .

மக்களின் பொருளாதாரத்திற்கு உப்பளங்களாகவும் போக்குவரத்திற்காகவும் பயன்படுத்தப்பட்ட பக்கிங்காம் கால்வாய் பொலிவிழந்துள்ளது. பார்க்கும் வழி எல்லாம் புதர்கள், முட்செடிகள் மண்டிக் கிடக்கிறது. தமிழகத்தின் புகழ்பெற்ற இந்த உப்பளப் பகுதி சகதியாக உள்ளது. சிறிய கவனக்குறைவு ஏற்பட்டாலும் வழுக்கி விழுந்து விடுவோம்.





**இருளர் குல தெய்வ பாடல்**

கற்பூரம் இல்லாம கிளம்பாத சாமி
கற்பூரம் இல்லாம கிளம்பாத சாமி
ஒரு நாளா திருநாளா ஊராரு சுகந்தானா
முழங்காலு தண்ணியிலே அம்மா
விளையாடும்
கரையிலே அலையே என் சிலையே
நீ வாம்மா என் முன்னாலே
அலையே என் சிலையே நீ வாம்மா
முன்னாலே
கற்பூரம் இல்லாம கிளம்பாத சாமி
கற்பூரம் இல்லாம கிளம்பாத சாமி
கொட்டி பூ தோட்டமா நம்ம
கொத்தி பறிக்க வாட்டமா
கொட்டி பூ தோட்டமா நம்ம
கொத்தி பறிக்க வாட்டமா
கொட்டி பூ தோட்டமா நம்ம
கொத்தி பறிக்க வாட்டமா
அலையே என் சிலையே
நீ வாம்மா என் முன்னால
கற்பூரம் இல்லாது கிளம்பாது சாமி
எட்டி பூ தோட்டமா நம்ம
எட்டி பாக்க வாட்டமா
எட்டி பூ தோட்டமா நம்ம
எட்டி பாக்க வாட்டமா
அலையே என் சிலையே
நீ வாம்மா என் முன்னால
அலையே என் சிலையே
நீ வாம்மா என் முன்னால
கற்பூரம் இல்லாம கிளம்பாத சாமி
கற்பூரம் இல்லாம கிளம்பாத சாமி
முழங்காலு தண்ணியிலே அம்மா
விளையாடும் கரையிலே
முழங்காலு தண்ணியிலே அம்மா
விளையாடும் கரையிலே

## இருளர் குழந்தைகள் முந்தைய நிலை

முன்பு இருந்த இருளர் குழந்தைகளிடம் படிப்பறிவு இல்லை. இதற்குக் காரணம் பெற்றோர்கள் படிக்காமல் இருந்ததுதான். வெளி உலகம் குறித்து அறியாமல் இருந்ததும்தான். பெற்றோர்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டாலும் குழந்தைகள் அங்கே இருக்கும் மற்ற குழந்தைகளுடன் பேசவும், விளையாடவும் மாட்டார்கள். இந்த காரணத்தினால் பெற்றோர்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப மாட்டார்கள். அவர்கள் செய்யும் தொழிலுக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்வார்கள். இதனால் இருளர் குழந்தைகளுக்குப் படிப்பறிவு இல்லாமல் போனது. அருணோதயா நிறுவனம் மூலமாக குழந்தைகள் தொடர் கண்காணிப்பு செய்யப்பட்டு, கல்வி குறித்த விழிப்புணர்வு அளிக்கப்பட்டு பள்ளியில் சேர்க்கப்பட்டார்கள். இதன் விளைவாக இன்று நான்கு குழந்தைகள் கல்லூரிகளில் பயின்று வருகின்றனர். மூன்று குழந்தைகள் பத்தாம் வகுப்பு படிக்கின்றனர். மற்ற குழந்தைகள் அனைவரும் தொடர்ந்து பள்ளிக்கு செல்கின்றனர் .

## அருணோதயாவின் பணி

இங்கே வசித்து வரும் மக்களுக்கு எந்த ஒரு சான்றிதழும் இல்லாத குடும்பத்திற்கு வாக்காளர் அட்டை, ஆதார் கார்டு, சாதிச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், முதியோர் ஒய்வூதியம், நூறு நாள் வேலை, மகளிர் குழு போன்ற பல உதவிகளைச் செய்தது அருணோதயா நிறுவனம்தான். குழந்தைகளுக்கு குழந்தைகள் சங்கம் மூலம்





பல விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு, பல பயிற்சிகளிலும் பங்கேற்க வைத்தனர்.

## குழந்தைகள் சங்கத்தின் குழந்தை

முதல்முதலில் அருணோதயா 2000-மாவது ஆண்டில் குழந்தைகள் சங்கமாக ஆரம்பித்தது. அது குழந்தைப் பருவத்தில் இருக்கும்போது, அருணோதயா குழந்தைகள் சங்கம் மாதம் ஒருமுறை நடைபெறும். எங்கள் பகுதியில் இருக்கும் அனைத்து குழந்தைகளும் சங்கத்தில் கலந்துகொள்வோம். அதில் கொடுக்கும் பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதில் கலந்துகொள்ளும் குழந்தைகளே தலைவர், செயலாளர், பொருளாளர் என்று நாங்களே எங்களை வாக்களித்து தேர்ந்தெடுத்துப்போம். தலைவராக தேர்ந்தெடுக்கப்படும் குழந்தையே கூட்டத்தை வழிநடத்துவார். சங்கப் பாடலை பாடி செயலாளர் கூட்டத்தைத் துவக்கி வைப்பார். பிறகு பொருளாளர் போன மாதம் நடந்த நிகழ்வு குறித்து கேள்வி கேட்பார். அதற்கு சரியாக பதில்





சொல்பவரை அவர் பாராட்டுவார். நம்ம கூட்டத்துல கைகளை சந்தோஷமாகக் கொடுத்து மகிழ்வோம்.

அந்த மாசத்துல குழந்தைகளுக்குப் பிறந்த நாள் வந்தா பாராட்டுவாங்க. குழுவில் இருக்கும் குழந்தைகள், இந்த மாதம் என்ன தேதியில் கூட்டம் போடுகிறோமோ அடுத்த மாதம் அதே தேதியில் கூட்டம் போடுவாங்க. அப்ப நடக்காத தேதியில என்ன பிரச்சனை இருக்கும் என்று குழந்தைகளிடம் கேட்டு அந்த தேதியில் மீட்டிங் போடுவோம். அடுத்த மாதம் என்ன நிகழ்வு செய்யப் போறோமோ அதை இந்த மாதமே முடிவு செய்வார்கள். இறுதியில் குழு உறுப்பினர் ஒருவர் நன்றியுரை சொல்லி முடிப்பார்.

## குழந்தை சங்கத்தால் நாங்கள் எப்படி பயனடைந்தோம்?

- வாழ்வதற்கான உரிமை
- வளர்ச்சிக்கான உரிமை
- பங்கேற்பிற்கான உரிமை

இது மாதிரி உரிமைகளை எங்களுக்காகவே தெரிவித்து, நாங்களே இந்த உரிமையை குழந்தைகளாக இருந்து, எங்களுக்கு நடக்கும் பிரச்சனைகளுக்கு நாங்களே தீர்வு காணும்படி எங்களுக்கு உரிமைகளைக் கொடுத்து, எங்களுக்குத் தெரிவித்து, அதை செயல்முறைக்குக் கொண்டு வந்து, எங்களை நாங்களே சரியாக வழி நடத்துவதற்கு அருணோதயா பணியாளர் ஜோதி மிஸ் எங்களுக்கு உதவினார்கள். எங்களின் பாதுகாப்புக்கு SOS ஆப் மூலம் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளலாம் என்று எங்களுக்கு விழிப்புணர்வு கொடுத்து இருக்கிறார்கள். 1098 பாதுகாப்பு பற்றி எடுத்துரைத்திருக்கிறார்கள்.

குழந்தைகளுக்குப் பாதுகாப்பான சட்டங்களும் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். ஆன்லைன் சேப்டி, இதழ் ஆசிரியர் பயிற்சி, கம்ப்யூட்டர் பயிற்சி அளித்தனர். எங்கள் மக்களுக்கு டைலரிங் பயிற்சி, மகளிர் குழு வழி நடத்துதல் பயிற்சி அளித்திருக்கிறார்கள். அருணோதயா குழந்தைகள் சங்க குழந்தைகள் கபடியில் வெற்றி பெற்று இருக்கிறார்கள். மாவட்ட அளவிலான நானூறு மீட்டர் ஓட்டபந்தயத்தில் வெற்றி பெற்று இருக்கிறார்கள். மூன்று குழந்தைகள் நர்சிங் படிக்கிறார்கள். ஒரு குழந்தை பாலிடெக்னிக்கில் படிக்கறாங்க. குழந்தைகளுக்கு குழந்தைகளே டியூஷன் எடுக்கறாங்க. பள்ளி செல்லாத குழந்தைகள் பள்ளி செல்கிறார்கள். இது மாதிரி அவர்களுக்குத் தேவையானவற்றை அவர்களே செய்து கொள்கிறார்கள். இது மாதிரி அருணோதயா நகர் குழந்தைகள் நிறைய பயிற்சி பெற்று குழந்தைகள் வளர்ச்சி அடைந்து இருக்கிறார்கள்.

**R.கன்னியம்மா,**
**நர்ஸிங்**



# இதழியல் பயிற்சியில் கற்றுக்கொண்டவை

செப்டம்பர் 28, 29 அன்று அடையாறு இளையோர் தங்கும் விடுதியில் இதழியல் பயிற்சி நடைபெற்றது. இதில் 25 குழந்தைகள் கலந்து கொண்டோம். இந்தப் பயிற்சியை மூத்த பத்திரிக்கையாளரும், எழுத்தாளரும், வாலு டிவியின் நிர்வாக இயக்குநருமான திரு. மோ.கணேசன், பயிற்சியாளராக இருந்து வழிநடத்தினார். இதில் எண்ணற்ற விஷயங்களை நாங்கள் அறிந்துகொண்டோம். பத்திரிக்கையின் வரலாறு, இதழ்கள் பற்றிய தகவல்கள், செய்தித்தாள் வரலாறு, செய்தி எழுதும் முறை, செய்தியை சுருக்கி எழுதுவது ஆகியவை குறித்து 'ஜாய்புல்' கற்றல் முறையில் எங்களுக்குப் பிடித்தவண்ணம் பயிற்சி அளித்தார் மோ.கணேசன். அதுமட்டுமின்றி சென்னை பல்கலைகழக இதழியல் துறை உதவி பேராசிரியர் முனைவர் தங்க.ஜெய்சக்திவேல் அவர்கள் கடிதம் எழுதும் முறை, கடிதம் மற்றும் தபால்தலை போன்றவை, தபால் முத்திரைகள், ஹாம் ரேடியோ குறித்தும் விளக்கமாகக் கூறினார். மூத்த வடிவமைப்பாளர் திரு. இரா.முத்துக்குமார் அவர்கள் தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டது சிறப்பாக இருந்தது. மோ.கணேசன் அவர்கள் நடத்திய விளையாட்டுகள் மிகவும் பிடித்தது. நங்கள் கற்றுகொண்டதில் சில...





### ஊடகம்

உலகின் பல்வேறு இடங்களில் நாள்தோறும் நடைபெறும் நிகழ்வுகளை மக்களுக்குக் கொண்டு செல்ல உதவும் கருவிகளே ஊடகங்கள். இவற்றை அச்சு, காட்சி, ஒலி, ஒளி, இணைய வழி ஊடகங்கள் என வகைப்படுத்தலாம். செய்திப் பதிவுகளையும், படங்களையும் உள்ளடக்கிய இதழ்களே அச்சு ஊடகங்கள். நிகழ்வுகளை உரை வடிவில் ஒலிபரப்பும் வானொலியானது கேட்பு ஊடகம். நிகழ்வுகளைக் காணொளிகளாக ஒளிபரப்பும் தொலைக்காட்சியானது காட்சி ஊடகம். இன்றைய அறிவியல் வளர்ச்சியினால் அச்சு, காட்சி, ஒலி ஆகிய ஊடகப் பதிவுகளை இணையவழி ஊடகம் ஒருங்கிணைக்கிறது. இவை அனைத்தின் வழியாகவும் செய்திகள் மக்களைச் சென்றடைகின்றன.

### இதழ்கள்

நாட்டின் சமூக, அரசியல், பொருளாதார வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் இதழ்கள் ஆற்றிவரும் பங்கு அளப்பரியது.

இதனால் பாரதிதாசனும்,

"காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான்!

இந்த பாரிடைத் துயில்வோர் கண்ணில் பாய்ந்திடும் எழுச்சி நீதான்!

ஊரினை, நாட்டை இந்த உலகினை ஒன்று சேர்க்கப் பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிக்கை பெண்ணே!'' என்று இதழ்களின் பெருமையைப் பாடுகிறார்.

### இதழ்களின் வகைகள்

நாள்தோறும் வெளியாகும் செய்தித்தாள்களை நாளிதழ்கள் எனவும், கால முறைப்படி வெளியாகும் இதழ்களைப் பருவ இதழ்கள் எனவும் வகைப்படுத்தலாம். பருவ இதழ்கள் வாரம் ஒருமுறை, மாதம் ஒருமுறை, காலாண்டு, அரையாண்டு என கால இடைவெளியை வரையறுத்துக்கொண்டு வெளிவருகின்றன.

### நாளிதழ்கள்

நாளிதழ்கள் நாள்தோறும் காலையிதழ், மாலையிதழ் என இரு வகையாக வெளி வருகின்றன. அவை உலகெங்கும் நிகழும் நிகழ்ச்சிகளை நாள்தோறும் மக்களிடம் கொண்டு சேர்க்கின்றன. நாளிதழ்களை உருவாக்குவதில் இதழ் ஆசிரியர்கள், செய்தியாளர்கள், பதிப்பாளர்கள், முகவர்கள் ஆகியோர் முக்கியப் பங்காற்றுகின்றனர்.

### பருவ இதழ்கள்

பருவ இதழ்கள் நாட்டு நடப்புகளை விவரித்து எழுதுகின்றன. இவை பல்வேறு துறைச் சார்ந்த பருவ இதழ்களாக உள்ளன. எடுத்துக்காட்டாக இலக்கிய இதழ்கள், அறிவியல் இதழ்கள், வேளாண் இதழ்கள், கலை இதழ்கள், சிறுவர் இதழ்கள், சமய இதழ்கள், மகளிர் இதழ்கள், அரசியல் இதழ்கள், ஜோதிட இதழ்கள், கல்வி இதழ்கள் ஆகியவற்றைச் சொல்லலாம்.

### செய்தியாளர்

செய்திகளைத் திரட்டுபவர்கள் செய்தியாளர்கள். இவர்களை நிருபர்கள் எனவும் அழைக்கின்றனர்.

### இதழ் உருவாக்கம்

இதழ் ஆசிரியர், செய்திகளின் முதன்மை கருதி எந்தச் செய்தியை எந்தப் பக்கத்தில் வெளியிடுவது என்று முடிவு செய்து இதழை வடிவமைப்பவர். இதழ் சிறப்பான முறையிலும் குறித்த நேரத்திலும் வெளிவருவதற்காக மாதிரித் திட்ட வரைவினை உருவாக்குவார்.







இந்த மாதிரித் திட்ட வரைவை, செய்தியின் கட்டமைப்பு முறை என்பார். செய்தியின் மதிப்பை உயர்த்துவதில் இக்கட்டமைப்பு முறை சிறப்பான இடத்தைப் பெறுகிறது. படிப்பவர்களின் உள்ளங்களைக் கவரும் வண்ணம், இதழ் கட்டமைப்பு இருத்தல் வேண்டும்.

**S. லோகேஷ்,**
**9-ஆம் வகுப்பு**





# செய்திகள் ஆரம்பித்தது எப்படி

செய்திகளை மக்களிடையே பரப்புதல் என்பது முதன் முதலில் களிமண் முத்திரைகள் மூலம் ஆரம்பித்தது.

அதன் பிறகு செய்திகள் பாறை கல்வெட்டு மூலமாகப் பரவ ஆரம்பித்தது. அதனையடுத்து துணியில் எழுதப்பட்டு செய்திகள் அனுப்பப் பட்டது. அதன்பிறகு தண்டோரா மூலம் செய்திகளை வெளிப்படுத்தினார்கள். அதன் பின்பு செய்திகள் இடம் பெற்றது ஓலைச் சுவடியின் மூலமாக.

ஓலைச்சுவடிகளை, பனை மரத்தின் ஓலை மட்டையில் இருந்து வெட்டி எடுப்பார்கள். பனை மரத்தில் பல வகைகள் இருந்தாலும் கூந்தப்பனை வகை மரமே அதற்கு சரியானதாக இருக்கும். கூந்தப்பனையின் ஓலைகள் நன்கு அகலமாக இருக்கும் என்பதால் அதை வெட்டி எடுத்து துண்டாக்கி, பதப்படுத்தி, மூலிகை வைத்து மீண்டும் பதப்படுத்தியபின் அதில் எழுதுவார்கள்.



எழுதப் பயன்படும் காகிதத்தை சீனர்கள் கண்டுபிடித்தனர். அவர்களிடமிருந்து ஐரோப்பியர்கள் கற்றுக்கொண்டனர். அச்சடிக்கும் இயந்திரத்தை ஐரோப்பியர்கள் உருவாக்கினார். அங்குதான் செய்தித்தாள்கள் உருவாகின.

அங்கிருந்துதான் இந்தியாவிற்கு செய்தித்தாள்கள் முதன்முதலாக வந்தன. அதன் பிறகு லண்டனில் இருந்து கேரளாவிற்கு அச்சு இயந்திரம் வந்தது. அங்கு அச்சடிக்கப்பட்ட முதல் புத்தகம் தமிழ் மொழியில்தான் அச்சடிக்கப்பட்டது. அதன் பெயர் **தம்பிரான் வணக்கம்**. அச்சிட்டதை தாள் என்றார்கள். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியில்தான் செய்தித்தாள் வந்தது. இந்தியாவில் இருந்து வெளிவந்த முதல் செய்தித்தாள் **பெங்கால் கெஜட்**. தமிழ்நாட்டில் இருந்து முதலில் வந்த செய்தித்தாள் **சுதேசமித்திரன்**.

**செய்தித்தாள் அமைப்பு**

செய்திதாளில் உலகம் முழுவதும் என்ன நடந்துள்ளது என்பதை அறிந்து கொள்ள முடியும். செய்தித்தாளின் முதல் பக்கத்தில் தலைப்புச் செய்திகள் இருக்கும். 2, 3, 4வது பக்கங்களில் மாவட்டச் செய்திகள் இருக்கும். நடுப்பக்கத்தில் இடது பக்கம் ஆசிரியர் பக்கம் எனப்படும். நடுப்பக்கத்தில் வலது பக்கம் இரண்டாவது முதன்மைப் பக்கம் எனப்படும். கடைசிப் பக்கத்தில் உலக வர்த்தகம் பற்றி இருக்கும். கடைசிப் பக்கத்தின் முன் பக்கத்தில் விளையாட்டு செய்திகள் இருக்கும். செய்தித்தாளை திறக்கும்போது அனைவரும் வலது புறத்தில்தான் முதலில் பார்ப்பார்கள். அதனால் விளம்பரக்காரர்கள் விளம்பரத்தைப் பணம் கொடுத்து அதிகமாக வலது புறத்தில் அச்சிடுவார்கள்.

K.நிஷாந்த்,
9-ஆம் வகுப்பு





# ஹாம் ரேடியோவில் பேசலாமா?




பேரிடர் மற்றும் ஆபத்துக் காலங்களில் மின்சாரமில்லாது போனாலும் மற்றவர்களோடு தொடர்புகொள்ளப் பயன்படுவது ஹாம் ரேடியாவாகும். ஹாம் ரேடியோ பல வகைகளில் பயன்படுகிறது. இது வேண்டும் என்றால் எட்டாம் வகுப்பு படித்து முடித்தவர்கள், இதற்கான தேர்வினை எழுதி பிரத்யேகமாக லைசென்ஸ் பெற வேண்டும். இதற்கானத் தேர்வு கட்டணம் ஐம்பது ரூபாய் மட்டுமே.

ஹாம் ரேடியோவின் **சோட்டா சோட்டி** நிகழ்ச்சி மூலம் உலகத்தில் இருக்கும் மாணவர்களுடன் பேசிக்கொள்ளலாம். இந்த ஹாம் ரேடியோவை நேஷனல் இன்ஸ்டிடியுட் ஆப் ஹாம் ரேடியோ அமைப்பிடமிருந்து இலவசமாக வாங்கிக்கொள்ளலாம். கால் சைன் மற்றும் லைசென்ஸ் கொடுக்கப்படும். ஹாம் ரேடியோவானது வி.எச்.எப் (வெரி ஹை ப்ரீக்வென்சி) மற்றும் எச்.எப். (ஹை ப்ரீக்வென்சி) என இரண்டு வகைகளில் கிடைக்கிறது. வி.எச்.எப். மூலமாக மாநில அளவிலும் எச்.எப். ரேடியோ மூலமாக நாடுகள் அளவில் பேசலாம்.

**கைப்பேசிக்கும் ஹாம் ரேடியோவிற்கும் உள்ள வேறுபாடுகள்**

கைப்பேசியில் 7358 xxxxxx என பத்து இலக்க எண்கள் இருக்கும். ஹாம் ரேடியோவில் எண்களுக்குப் பதிலாக எண்ணும் ஆங்கில எழுத்துகளும் கொண்ட கால்சைன் இருக்கும். ஹாம் ரேடியோவில் ஆண்டனா இருக்கும். கைப்பேசியில் ஆண்டனா இருக்காது. கைப்பேசிக்கு மின்சாரம் தேவை. ஹாம் ரேடியோவிற்கு பேட்டரி இருந்தால் போதும்.

K.நிஷாந்த்,
9-ஆம் வகுப்பு



# தமிழ் மொழி

முன்னுரை

தமிழின் பெருமையை தமிழ்நாட்டில் உள்ள தலைவர்கள் மட்டுமல்லாமல் வெளிநாட்டில் உள்ள பலதலைவர்களும்பாராட்டியுள்ளனர். மற்ற மொழிகள் எல்லாம் பேசுவதற்கு மட்டும்தான் உபயோகப்படும். ஆனால் தமிழ் உடலோடும் உணர்வோடும் கலந்த ஒரு மொழி. தமிழ் மொழி 4400 ஆண்டுகள் பழமையானது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

பாரதியார் தமிழுக்கு அழகு சேர்க்கும் வகையில்,

*'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'*

என்று பாடியுள்ளார்.

செம்மொழியான தமிழ்

தமிழ் மொழி செம்மொழி என்ற பெருமையைப் பெற்றது. தொன்மை, தனித்தன்மை, பொதுமை, பண்பு, நடுநிலைமை, தாய்மை, தனித்து இயங்கும் தன்மை, இலக்கணம், இலக்கிய வளம், கலைநயம், உயர்ந்த சிந்தனை, மொழி கோட்பாடு போன்ற பண்புகளைக் கொண்டதால்தான் தமிழ் செம்மொழி என்ற பெயரைப் பெற்றுள்ளது.

பழமை வாய்ந்த மொழி

ஒரு மொழி செம்மொழி ஆக வேண்டும் என்றால் குறைந்தது 1000 ஆண்டுகளேனும் பழமை வாய்ந்ததாக இருக்க வேண்டும். அந்த வகையில் பார்க்கும்போது நம்முடைய மொழி பல்லாயிரம் ஆண்டுகள் பழமையான மொழி. செம்மொழி என்பதற்கு செம்மையான மொழி என்று பொருள்.

தமிழின் சிறப்பு

நம்முடையமொழியில் எழுந்த இலக்கியங்கள், இலக்கணங்கள், புதுக் கவிதைகள், கட்டுரைகள், நாவல்கள், சிறுகதைகள் போன்றவைதமிழ்மொழியின் வளர்ச்சிக்கு உதவியாக இருந்தன.

திருவள்ளுவர், கம்பர், ஔவையார், பாரதியார் போன்றோர்கள் தமிழை வளர்த்து வந்தார்கள். இன்று உலகில் எழுந்த மொழிகள் பலவற்றிற்குத் தமிழே அடித்தளமாக உள்ளது.

தமிழின் நிலை

தமிழ் மொழிக்கு அக்காலத்திலும் சரி, இக் காலத்திலும் சரி பல எதிர்ப்புகள் இருந்து வருகிறது.

இப்பொழுதும் ஆங்கில மொழியின் தாக்கம், வடமொழியின் ஆதிக்கம் எழுந்துள்ளது. நம்முடைய மொழியைக் காப்பது தமிழர்களின் கடமையாகும். தமிழ்மொழியை அழியாமல் பேணிக்காப்பதற்கு முடிந்த வரை தமிழ் மொழியைப் படிப்பது நல்லது. ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிகளைப் படிப்பது தவறல்ல. ஆனால் அது தமிழின் வளர்ச்சியைத் தடுக்காத அளவிற்கு இருக்க வேண்டும்.

முடிவுரை

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு' வரிகளுக்கு ஏற்ப நம்முடைய மொழி இன்று சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. அந்த சிறப்பை நாமும் காத்து தமிழின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். தாய் மொழியான தமிழ் தொன்மையையும் சிறப்பையும் கொண்டு புகழின் உச்சியில் உள்ளது. அதனுடைய மேன்மைக்குப் போராட வேண்டியது ஒவ்வொரு தமிழர்களின் லட்சியமாக இருக்க வேண்டும்.

வாழ்க தமிழ்..!
வளர்க தமிழ்..!



V.நாகவள்ளி,
9-ஆம் வகுப்பு



# வாழ்வில் உயர்ந்தவர்

இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானி, தொழில்நுட்ப வல்லுநர், மிகப் பெரிய பொறியாளர், இந்தியாவின் 11வது குடியரசுத் தலைவர், இந்திய ஏவுகணை நாயகன், இந்திய விஞ்ஞான வளர்ச்சியின் தந்தை, சிறந்த ஆசிரியர் மற்றும் அனைவராலும் மதிக்கத்தக்க அற்புதமான பேச்சாளர், வருங்கால இளைஞர்களின் முன் மாதிரியாகக் கருதப்படும் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாறுதான் இது.

**பிறப்பு**

1931-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ஆம் நாள் ஜைனுலாப்தீனுக்கும் ஆஷியம்மாவுக்கும் மகனாக ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் தீவில் அமைந்துள்ள ராமேஸ்வரத்தில் பிறந்தார். இவர் ஓர் இஸ்லாமியக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

**இளமைப்பருவம்**

அப்துல்கலாம் ராமேஸ்வரத்தில் உள்ள தொடக்கப்பள்ளியில் தனது பள்ளிப் படிப்பைத் தொடங்கினார். ஆனால் இவருடைய குடும்பம் ஏழ்மையில் இருந்ததால் இளம்வயதிலேயே இவர் தன்னுடைய குடும்பத்திற்காக வேலைக்குச் சென்றார். பள்ளி நேரம் போக மற்ற நேரங்களில் செய்தித்தாள்களை விநியோகம் செய்தார். இவருடைய பள்ளிப்பருவத்தில் ஒரு சராசரி மாணவனாகவே வளர்ந்தார்.

**கல்லூரி வாழ்க்கை**


திருச்சிராப்பள்ளியில் உள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியில் இயற்பியல் பயின்றார். 1954-ஆம் ஆண்டு இயற்பியலில் இளங்கலைப் பட்டம் பெற்றார். ஆனால் இயற்பியல் துறையில் ஆர்வம் இல்லை என உணர்ந்த இவர் 1955-ஆம் ஆண்டு தன்னுடைய விண்வெளி பொறியியல் படிப்பை சென்னையிலுள்ள எம்.ஐ.டி.யில் தொடங்கினார். பின்னர் அதே கல்லூரியில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.



S.ஜிஷ்ணு,
8-ஆம் வகுப்பு

**விஞ்ஞானியாக ஏ.பி.ஜே. அப்துல்கலாம்**

1960-ஆம் ஆண்டு பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (DRDO), வானூர்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் விஞ்ஞானியாகத் தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கிய அப்துல்கலாம், ஒரு சிறிய ஹெலிகாப்டரை இந்திய ராணுவத்திற்காக வடிவமைத்துக் கொடுத்தார். பின்னர் இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கூடத்தில் (ISRO) தனது ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்ந்த அவர், துணைக்கோள் ஏவுகணை குழுவில் (SLV) ராக்கெட்டைப் பயன்படுத்தி ரோகிணி 1 என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச்செய்தார். அது அவருக்கு மட்டுமல்லாமல் இந்தியாவிற்கே ஒரு சாதனையாக அமைந்தது. இத்தகைய வியக்கத்தக்கச் செயலைப் பாராட்டிய மத்திய அரசு இவருக்கு 1981-ஆம் ஆண்டு இந்தியாவின் உயரிய விருதுகளில் ஒன்றான பத்ம பூஷன் விருது வழங்கி கௌரவித்தது. 1963-ஆம் ஆண்டு முதல் 1983-ஆம் ஆண்டு வரை இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கூடத்தில் பல பணிகளைச் சிறப்பாகச் செய்த இவர், பொக்ரான் அணுகுண்டு சோதனை மூலம் இந்தியாவை உலக அரங்கில் வல்லரசாக்கினார். இந்தியாவின் குடியரசுத் தலைவராகவும் உயர்ந்தார்.



படித்ததில் பிடித்தது!

# பொன்மொழிகள்



(1) உலகம் உன்னை அறிவதைவிட உலகிற்கு உன்னை அறிமுகம் செய்துகொள்!

(2) அழகைப்பற்றி கனவு காணாதீர்கள். அது உங்கள் கடமையைப் பாழாக்கிவிடும். கடமையைப் பற்றி கனவு காணுங்கள். அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்!

(3) உன் கைரேகையைப் பார்த்து எதிர்காலத்தை நம்பிவிடாதே! ஏனென்றால் கையே இல்லாதவனுக்குக்கூட எதிர்காலம் உண்டு!

(4) முடியாது என்று நீ சொல்வதை எல்லாம் யாரோ ஒருவன் எங்கோ செய்து கொண்டிருக்கிறான்!

## கதைகள்

### குட்டி கதை -1

ஒரு நாள் ஒருத்தன் குயிலிடம் சொன்னான், ''நீ மட்டும் கருப்பா இல்லைன்னா எவ்ளோ நல்லா இருக்கும்.'' கடலிடம் சொன்னான், ''நீ மட்டும் உப்பா இல்லைனா எவ்ளோ நல்லா இருக்கும்.'' ரோஜாவிடம் சொன்னான், ''உன்னிடம் முட்கள் இல்லைன்னா எவ்ளோ நல்லா இருக்கும்.'' ''ஏ! மானிடா... உன்னிடம் மட்டும் பிறரின் குறை கண்டுபிடிக்கும் பழக்கம் இல்லைன்னா, எவ்ளோ நல்லா இருக்கும்.''

பிறரிடம் குறை காணா மனிதன் என்றுமே அழகுதான்!



### குட்டி கதை - 2

ஒரு மனிதன் இரவு நேரத்தில் மலை உச்சியிலிருந்து தவறி விழுந்தபோது, தற்செயலாகப் பாறையின் விளிம்பில் நீட்டிக் கொண்டிருந்த ஒரு வேரைப் பற்றிக்கொண்டான். பிடி தளர்ந்தால் பாதாளம் போகும் அபாயம் என நினைத்தான். உண்மையில் அவன் தொங்கிக் கொண்டிருந்த இடத்திலிருந்து 1 அடி தூரத்தில்தான் தரைப்பகுதி இருந்தது. அவன் அதுவரை 'கடவுளே, உன்னை நான் முழுமையாக நம்புகிறேன். நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்' என்று வேண்டினான். அப்போது வானிலிருந்து ஒரு குரல்! ''நீ என்னை நம்ப மாட்டாய்!'' என்றது. ''கடவுளே, என்னைக் கைவிட்டு விடாதே. நிச்சயம் நம்புகிறேன்.'' ''எனக்கு நம்பிக்கை இல்லை. ''கடவுளே, நீதான் காப்பாற்ற வேண்டும்''. ''சரி, உன்னைக் காப்பாற்றுகிறேன். முதலில் நீ பிடித்திருக்கும் வேரை விட்டுவிடு.'' ''வேரை விட்டுவிட்டால் கீழே விழுந்து இறந்து விடுவேனே?'' அதன் பின் வானத்திலிருந்து குரல் எதுவும் கேட்கவில்லை.

**நீதி:**

வாழ்க்கையில் நம்பிக்கைக்கு உரியவர்களை நம்பித்தான் ஆக வேண்டும். யாரையுமே நம்பாவிட்டால் நமக்கு வரும் நல்ல வாய்ப்புகள் கை நழுவிப் போகும்.

**S.நிவிஷ்,**
**8-ஆம் வகுப்பு**





# குழந்தைகள் பங்கேற்பைக் கண்டு மிரண்டு போனேன்

குழந்தைகள் பங்கேற்பில் எனது பயணமானது தெளிந்த நீரோடையாக, அமைதியாக, அதன் இலக்கை நோக்கி பயணம் செல்வது போன்று இலகுவாக இருக்கின்றது. குழந்தைகளின் சிரிப்பு, அவர்களின் கருத்துகள், ஓவியங்கள், எழுத்துக்கள், சிந்தனைகள் எல்லாவற்றிலும் ஒரு புதுமையைக் காண முடியும். குழந்தைகளிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டியது அதிகம். குழந்தைகளிடையே பணிபுரிபவர் தம்மை மேம்படுத்திக் கொள்ள புத்தகங்களைப் படிக்க வேண்டிய அவசியம் இல்லை. குழந்தைகளோடு உரையாடினாலே போதும் என்று சொல்வேன்.



**நீங்கள் படித்து கொண்டிருக்கும் இந்த சிட்டெறும்பு பேசுது இதழை எழுதியவர்கள் குழந்தை பத்திரிகை ஆசிரியர்களே**

**நான் வியந்த நிகழ்வுகள்**

குழந்தைகள் பங்கேற்பின் அடுத்த நிலையை அருணோதயா குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பு அடைந்துள்ளதை என்னால் பார்க்க முடிந்தது. உதாரணத்திற்கு எங்கள் பகுதியில் பாதாள சாக்கடை நிரம்பி வழிகின்றது, கொசு அதிகமாக உள்ளது, எங்களுக்கு பாதுகாப்பு இல்லை, குப்பைகள் தினசரி சுத்தப்படுத்துவது இல்லை. இப்படி எண்ணற்ற பிரச்சனைகளைக் கண்டறிந்து மனு கொடுத்து அதற்கு தீர்வு கண்டுள்ளனர், அருணோதயா குழந்தைகள் சங்க குழந்தைகள். இதிலிருந்து வேறுபட்டு அறிவியல் கண்ணோட்டத்தில் இப்பிரச்சனைகளை அணுகி, அதைக் களைய கருவிகள் கண்டறிந்து, அவற்றை ஒரு கண்காட்சியாக வைத்து, அவற்றை இயக்கிக் காட்டி, குழந்தைகள் யார் என்பதை இச்சமூகத்திற்கு அடையாளம் காட்டியதோடு, அரசுக்கும் நிரூபித்து பங்கேற்பின் அடுத்த நிலையை எட்டிப் பிடித்தனர். அந்த கண்காட்சியில் பார்வையாளர்களுக்கு அவர்களின் கண்டுபிடிப்பை விவரித்துக் கூறும் போது அவர்களின் கண்களில் நான் கண்ட பூரிப்பு மற்றும் தன்னம்பிக்கை நிறைந்த பார்வை என்றும் மறக்க முடியாத காட்சியாக இருக்கின்றது .

**சிட்டெறும்பு பேசுது** இதழின் ஆசிரியர் குழு, 18 வயது நிரம்பி சங்கத்தை விட்டு வெளியேறிய நிலையில் புதிய பத்திரிக்கை ஆசிரியர் குழுவை உருவாக்க, பத்திரிக்கைத் துறையை சேர்ந்த வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளித்தோம். இரண்டு நாள் பயிற்சிதான் அது. ஆனால் அந்த இரண்டு நாட்களில் ஓர் இளம் எழுத்தாளரை உருவாக்கி, அவர்களால் புத்தகங்களையும் எழுத முடியும் என்று நிரூபித்துக் காட்டியது வியப்புக்குள்ளாக்கியது. அவர்களின் கவிதை நடைகள், கற்பனைத் திறன்களைப் பார்க்கும்போது அவர்களின் பங்கேற்கும் அளவு அதிகரித்துள்ளது என்பதற்கு இது சான்றாக உள்ளது. நீங்கள் படித்து கொண்டிருக்கும் இந்த **சிட்டெறும்பு பேசுது** இதழை எழுதியவர்கள் குழந்தை பத்திரிகை ஆசிரியர்களே! அந்த இதழியல் பயிற்சியின் மூலம் 25 இளம் பத்திரிகை ஆசிரியர்கள் உருவாகி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கண்ட இந்த இரண்டு நிகழ்வுகளிலும் குழந்தைகள் பங்கேற்பைக் கண்டு வியந்து போனேன் என்று சொல்வதைவிட மிரண்டு போனேன் என்பதுதான் உண்மை. குழந்தைகளை அவர்கள் இயல்போடு பங்கேற்கத் தளம் அமைத்து கொடுக்கும்போது அவர்களால் எதையும் சாதிக்க முடியும் என்பது மறுக்க முடியாத உண்மை.

இப்படிக்கு

**எஸ்.செல்வி**
**குழந்தை பங்கேற்பு கருத்தியல் வழிநடத்துநர்**

# சின்னச் சின்னச் சிட்டுகளுக்கு சிறகு முளைத்தது!





**தமிழ்:** இன்று எப்படியாவது இளம் வழி நடத்துநர் தேன்மொழியைச் சந்தித்து, அவர் இளம் வழிநடத்துநராக எப்படி மாறினார் என்பதைக் கேட்டு நம் **சிட்டெறும்பு பேசுது** பத்திரிகையில் அவரின் அனுபவங்களைப் பகிர வேண்டும். இது மற்ற குழந்தைகளுக்கு ஓர் ஊக்குவிப்பாக இருக்கும். தேன்மொழி வீட்டுக்கே சென்று பேட்டி எடுப்போம்.

*(தேன்மொழியின் வீடு)*

**தமிழ்:** தேன்மொழி... தேன்மொழி!

**தேன்மொழி:** அடடே! தமிழ்! வா... வா... எப்படி இருக்க?

**தமிழ்:** நான் நல்லா இருக்கேன் பா!

**தேன்மொழி:** உன்னைச் சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சி! என்ன விஷயமாக என்னை பார்க்க வந்துள்ளாய்?

**தமிழ்:** நமது குழந்தைகள் சங்கத்தில் செப்டம்பர் 29.09.23 அன்று **சிட்டெறும்பு பேசுது** இதழாசிரியர் பயிற்சி நடைபெற்றதல்லவா? அதில் நான் உதவி ஆசிரியராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளேன்.

**தேன்மொழி:** வாழ்த்துக்கள் தமிழ்! மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

**தமிழ்:** நீயும் இளம் வழிநடத்துநர் பயிற்சியில் சிறந்த இளம் வழிநடத்துநராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு வாழ்த்துகளைத் தெரிவித்து கொள்கிறேன். எனது முதல் பேட்டியாக இளம் வழிநடத்துநராக தேர்ந்தெடுக்கப்பட்ட உன்னுடைய அனுபவங்களைக் கேட்க வந்துள்ளேன். உன்னுடைய அனுபவங்கள் நமது மாநாட்டில் வெளிவரும் **சிட்டெறும்பு பேசுது** இதழில் இடம்பெறும்.

**தேன்மொழி:** நன்றி தமிழ். இளம் வழிநடத்துநர் பயிற்சி மே 12, 13 ஆகிய தேதிகளில் அடையாறு இளையோர் விடுதியில் நடைபெற்றது. இதில் 40 குழந்தைகள் பங்கேற்றனர். இப்பயிற்சியில் இணையதளப் பாதுகாப்பு, குழந்தைகள் உரிமை மற்றும் பங்கேற்பு, குழந்தைகளின் இன்றைய நிலை போன்ற தலைப்புகளில் எங்களுக்கு பயிற்சி கொடுத்தார்கள். பயிற்சியாளர்களாக திரு. சாலமன், வாழ்க்கைத்திறன் கல்வி பயிற்சியாளர், திரு.சுரேஷ், முன்னாள் குழந்தைகள் சங்க கூட்டமைப்பு உறுப்பினர், திருமதி. செல்வி, குழந்தைகள் சங்க கருத்தியல் வழிநடத்துநராக இருந்து பயிற்சி அளித்தனர்.

பயிற்சியின் முடிவில் குழந்தைகள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, பயிற்சிக் கையேடுகள் தயாரிக்கப்பட்டு, மாடல் வகுப்புகள் நடத்தப்பட்டு, 15 இளம் வழிநடத்துநர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அதில் நானும் ஒரு வழிநடத்துநர். நாங்கள் கற்றுக்கொண்ட தகவல்களை குழந்தைகளுக்கு ஏற்றவாறு, எளிய முறையில் சார்ட்டில் எழுதி வடிவமைத்து, அருணோதயா குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் ஒருநாள் பயிற்சியாகக் கொடுத்தோம். மொத்தம் 1,500 குழந்தைகள். 30 ஒரு நாள் பயிற்சி முகாம்கள் நடத்தினோம்.



**தமிழ்:** கேட்கவே ஆச்சர்யமாக உள்ளது தேன்மொழி! நம் பகுதியில் உள்ள குழந்தைகள் வெவ்வேறு பகுதியில் இருந்து வெவ்வேறு குணாதிசயங்களில் இருப்பார்கள். அவர்களுக்கு எப்படி நீங்கள் பயற்சி அளித்தீர்கள் தேன்மொழி?

**தேன்மொழி:** இளம் வழிநடத்துநர்கள் பயிற்சியில் ஒரு இளம் வழிநடத்துநருக்குரிய குணநலன்கள் என்ன? பொறுப்புகள் என்ன? கடமைகள் என்ன? திறன்கள் என்ன என்பது குறித்து கற்றுக் கொண்டோம். இது எங்களுக்கு உதவியாக இருந்தது. எங்களிடமிருந்த பயம், தயக்கம், நம்மால் முடியுமா என்ற சந்தேகம் எல்லாம் தீர்ந்தது.

பயிற்சியில் கற்றுக்கொண்ட தகவல்களைக் கொண்டு எங்கள் திறன்களை வளர்த்துக் கொண்டோம். குழந்தைகளை அணுகும் முறையைக் கற்றுகொண்டோம். பள்ளியிலும் எங்கள் பங்கேற்பு, பேச்சாற்றல் போன்ற திறன்களைக் கண்டு ஆசிரியர்கள் பாராட்டினார்கள். எங்களுக்குத் தன்னம்பிக்கை வளர்ந்துள்ளது. எங்கள் மண்டல குழந்தைகள் சங்கச் செயல்பாடுகளை, நாங்களே முன்னின்று நடத்தும் திறன் பெற்றுள்ளோம். எங்களுக்கு இளம் வழிநடத்துநர் என்ற புதிய சிறகுகள் வளர்ந்துள்ளதாக உணர்கிறோம். உயர உயரப் பறந்து எங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்வோம்.

**தமிழ் :** நன்றி தேன்மொழி!



**P.தமிழ்**
**9ஆம் வகுப்பு**

## தேசிய குழந்தைகள் கலந்துரையாடல் கூட்டம்



ஐந்தாவது தேசியக் குழந்தைகள் கலந்துரையாடல் கூட்டம் மே 29,30, 31 ஆகிய தேதிகளில் குஜராத்தில் உள்ள அஹமதாபாத் நகரில் நடைபெற்றது. 13 மாநிலங்களில் இருந்து 70 குழந்தைகள் இதில் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தை குஜராத்தில் உள்ள ஷாய்ஷிவ் அமைப்பின் பால்சேனா குழந்தைகள் இயக்கம் நடத்தியது. இந்தக் கூட்டத்தில் அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பில் இருந்து நானும், நரேன் குமார் இருவரும் பங்கேற்றோம். எங்களுடன் அருணோதயா சார்பாக செல்வி மிஸ் அவர்களும் கலந்து கொண்டார். மூன்று நாட்கள் இரயில் பயணம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நங்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டே சென்றோம்.

நாங்கள் அனைவரும் மதம், மொழி, கலாச்சாரம், பணம், நிறம், அறிவு போன்ற வேறுபாடின்றி தேசிய குழந்தைகள் கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்டோம். வித்தியாசமான மொழிகள், உணவு வகைகள், கலாச்சாரப் பகிர்வுகள் போன்றவை மறக்க முடியாத நினைவுகளாக உள்ளது.

ஷாய்ஷிவ் அமைப்பின் பால்சேனா குழந்தைகள் இயக்கம் துவங்கி 20 ஆண்டுகள் நிறைவு பெற்றதைக் கொண்டாடும் விதத்தில் அவர்களின் சாதனைகளைப் பகிர்ந்து கொண்டனர். குழந்தைகள் பங்கேற்பானது குடும்பம், பள்ளி, சமூகம் மற்றும் குடும்பத்தில் எவ்வாறு நிகழ வேண்டும்? குழந்தைகள் பங்கேற்பைப் புரிந்துகொள்வது குறித்தும், குழந்தைகளின் பலம், பலவீனம், வாய்ப்பு, தடைகள் போன்றவை குறித்துக் கற்றுகொண்டோம். கலாச்சார நடனம், பாட்டு போன்றவை புதுமையாக இருந்தது. குழந்தைகள் கொண்டாட்டம் போன்று இருந்தது. மேலும் பழைய அஹமதாபாத் கட்டிடங்கள், சபர்மதி ஆஸ்ரமம், இஸ்ரோ விண்வெளி மையம் போன்ற இடங்களுக்கு நங்கள் சுற்றுலா சென்றது மகிழ்ச்சியைத் தந்தது.



**P.தேன்மொழி**
**12-ஆம் வகுப்பு**

# வருமுன் காப்போம்!



**அம்மா:** பரீட்சை இருக்குன்னு சொன்னியே மணி? படிச்சிட்டியா?

**மணி:** முக்கியமான கேள்வி எல்லாம் படிச்சிட்டேன் மா!

**அம்மா:** பரிட்சையை பார்த்து எழுதப்பா!

**மணி:** வாத்தியார் பார்க்காமதான் எழுதணும்னு சொல்லி இருக்காருமா!

*(தேர்வு முடிந்த பின்)*

**ரமேஷ்:** மணி, பரிட்சை எப்படிடா எழுதின?

**மணி:** ச்சே! சார் ரொம்ப மோசம்டா முக்கியமான கேள்வி எல்லாம் படிச்சிட்டு வந்திருந்தேன். அவரு அதவிட்டுட்டு முக்கியமில்லாத கேள்விகளைக் கேட்டுட்டார், அதான் செ ாதப்பிடிச்சு.

*(உரையாடலைக் கேட்டுக்கொண்டே ஆசிரியர் மற்றொருவருடன் வகுப்பறைக்குள் நுழைகிறார்)*

**ஆசிரியர்:** மாணவர்களே! நமது முன்னாள் மாணவர் ரவி தற்போது பேரிடர் பாதுகாப்பு ஆலோசகராக உள்ளார். நம்மிடையே கலந்துரையாட வந்திருக்கிறார்.

**ரவி:** அன்பு மாணவர்களுக்கு வணக்கம்.





இன்னைக்குப் பேரிடர் பத்தி சில தகவல்களை உங்களுக்குச் சொல்லப் போறேன்.

*(ரமேஷிடம் ''நமக்கு எதுக்குடா இதெல்லாம்'' என மணி கிசுகிசுக்கிறான்)*

**ரவி:** பேரிடரில் இரண்டு வகை உண்டு. அவை வெள்ளம், புயல், பூகம்பம், சுனாமி போன்று இயற்கையாக ஏற்படுவது ஒரு வகை. விஷவாயுக் கசிவு, சாதி மதக் கலவரம், போர் என மனிதச் செயல்பாடுகளால் ஏற்படுபவை மற்றொரு வகை. எந்த வகைப் பேரிடராக இருந்தாலும் பாதுகாப்பான இடத்திற்கு இடம்பெயர்ந்து செல்லும்போது, ரேஷன் கார்டு, பத்திரங்கள், சான்றிதழ்கள் போன்ற முக்கிய ஆவணங்களையும், கெட்டுப்போகாத உணவு, குடிநீர், குழந்தைகளுக்கான உணவு போன்றவற்றை மறக்காமல் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**ஆசிரியர்:** மணி! நீ இன்னிக்கு ஏன் ஒழுங்கா பரிட்சை எழுதல?

**மணி:** என்ன சார் நீங்க? நான் முக்கியமான கேள்விகளைப் படித்திருந்தேன். ஆனால் நீங்கள் முக்கியமில்லாதக் கேள்விகளைக் கேட்டு விட்டீர்கள். அப்புறம் எப்படி ஒழுங்கா எழுதுறது?

**ஆசிரியர்:** அந்தக் கேள்விகள் முக்கியமில்லை என்று எப்படி முடிவுக்கு வந்த?

**மணி:** இதுக்கு முன்னாடி அடிக்கடி கேட்ட கேள்விகள் முக்கியம் என்று நினைக்கிறோம். வராத கேள்விகள் முக்கியமில்லாதவை.

**ரவி:** அது முக்கியமில்லைன்னா ஏன் பாடத்தில் இருக்கு? இதைப் பேரிடருடன் சம்பந்தப்படுத்திப் பார். இதுவரைக்கும் வரலங்கறதுக்காக ஒரு பேரிடரைப் பத்தி தெரிஞ்சுக்காம இருக்கலாமா? விழிப்புணர்வுடன் இருந்தாதானே பாதிப்புகளைக் குறைக்க முடியும்.

**ஆசிரியர்:** இதைப்பற்றி ஒரு குறள் கூட இருக்கே. 'வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்.'

**மணி:** நீங்க சொல்றது சரிதான். பேரிடரைப் பற்றித் தெரிஞ்சிக்க வேண்டியது மிகவும் அவசியங்கறதைப் புரிஞ்சுகிட்டேன்.




அதெல்லாம் சரிங்க சார். ஆனா இந்த மாதிரி நேரத்துல நாங்க என்ன பண்ண முடியும்?

**ரவி:** பேரிடர் காலங்களில் குழந்தைகளும் சிறப்பாகப் பங்காற்ற முடியும். சிறு குழந்தைகள், முதியோர், கர்ப்பிணிப் பெண்கள், நோயுற்றோர், மாற்றுத்திறன் உடையோர் மீது தனி கவனம் செலுத்தணும். எச்சரிக்கையைக் கேட்டு விழிப்புணர்வோடு நடக்கணும். இதுபோன்ற விஷயங்களை மற்றவர்களுக்கு நீங்க எடுத்து சொல்லலாம். பெரியவர்களுடன் சேர்ந்து முன்னெச்சரிக்கை செய்தல், முதலுதவி செய்தல் போன்றவற்றிலும் ஈடுபடலாம்.

**மணி:** நாம் கடற்கரையில் இருக்கிறோம். நமக்கு சுனாமி தவிர பெரிய ஆபத்து ஏதுமில்லை. பின்னர் எதுக்கு நாம மற்ற பேரிடர்கள் பற்றி தெரிஞ்சுக்கணும்.

**ரவி:** நாம் கடற்கரை பகுதியில் இருந்தாலும், கடலில் காற்றழுத்தத்தின் காரணமாக புயல் வந்தால் முதல் பாதிப்பு நமக்குத்தான். மேலும் இந்தோனேசியாவில் கடலுக்கு அடியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் வந்த சுனாமியால் நாமெல்லாம் பாதிக்கப் பட்டோம். அப்ப நிலநடுக்கம் பற்றியும் தெரிந்து கொள்வது அவசியம்தானே?

**மணி:** உண்மைதான் சார். இனி அதையும் தெரிஞ்சுக்கறோம்.

**V. நாகராணி,**
**10-ஆம் வகுப்பு**



# செய்தித்தாள்களைப் பற்றி தெரிந்துகொள்வோமா?

நம்மைச் சுற்றியும், நம் மாநிலம், தேசம் மற்றும் உலகில் நடக்கும் நிகழ்வுகளையும் மக்களுக்குத் தெரிவிப்பவை செய்தித்தாள்கள். நாம் வீட்டில் இருந்தபடியே உலக நிகழ்ச்சிகளை அறிந்துகொள்ள செய்தித்தாள்கள் உதவுகிறது. செய்தித்தாள்கள் தினமும் வெளியிடப்படுவதால் அதை தினசரிகள் என்றும் அழைப்பதுண்டு.

**தோற்றமும் வளர்ச்சியும்**

ஜான் கூட்டன் பர்க் என்னும் அறிவியல் அறிஞர் அச்சு இயந்திரத்தைக் கண்டறிந்தார். அதன் துணையால் 1615-இல் 'பிராங்க் பாட்டன்' என்னும் வார இதழ் முதல் செய்தித்தாளாக ஜெர்மனியில் வெளியிடப்பட்டது. இந்தியாவில் 1780-இல், **பெங்கால் கெஜட்** எனும் இதழ் வெளியாகியது. தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் தமிழ் நாளிதழ் **சுதேசமித்திரன்**. இது 1882-இல் வெளிவந்தது.

| தமிழகத்தில் வெளிவந்த சில இதழ்கள் |
|---|
| பிரபஞ்ச மித்திரன் |
| ஞானபானு |
| இந்தியா |
| பாலபாரதி |
| தமிழ்நாடு |
| ஆனந்த விகடன் |
| மணிக்கொடி |
| தினமணி |
| விடுதலை |

**செய்தித்தாளின் வகைகள்**

இதழ்களானது இலக்கியம், கதை, கவிதை, கட்டுரை, அரசியல் முதலியவற்றைத் தொகுத்து வெளியிடுகின்றன. நாளிதழ்கள் பொதுவாக அரசியல், வணிகம், பொழுதுபோக்கு, விளையாட்டு போன்ற பல துறை சார்ந்த செய்திகளைத் தாங்கி வருகின்றன. இன்று நம் நாட்டில் பல மொழிகளிலும் நாளிதழ்கள், வார இதழ்கள், வாரம் இருமுறை இதழ்கள், இருவார இதழ், மாத இதழ்கள் என பல்வேறு வகைகள் உள்ளன. தினத்தந்தி, தினமலர், தினகரன், இந்து தமிழ் திசை, மாலைமலர், தமிழ் முரசு, மாலை முரசு போன்ற தமிழ் செய்தித்தாள்களும், தி இந்து, தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், டைம்ஸ் ஆப் இந்தியா, டெக்கான் கிரானிக்கள் ஆகிய ஆங்கில நாளிதழ்களும் தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் பிரபலமான செய்தித்தாள்கள் ஆகும்.

**பத்திரிகை சுதந்திர நாள்**

1993-ஆம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டத்தில், ஒவ்வொரு ஆண்டும் மே 3-ஆம் தேதி அன்று பத்திரிகை சுதந்திர நாளாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இன்றைய செய்தி நாளைய வரலாறு என்பதை அறிவோம். குறைந்த செலவில் நிறைந்த பயனைத் தரும் செய்தித்தாள் படிப்பதை நாம் அனைவரும் வழக்கமாகக் கொள்வோம்.





M.சுஹாசினி
11- ஆம் வகுப்பு



படித்ததில் பிடித்தது!

# புத்திசாலி ஆடு

ஒரு மந்தையில் இரண்டு ஆடுகள் நண்பர்களாக இருந்தன. திடீர் என இரண்டு ஆடுகளுக்கும் சண்டை வந்து முட்டிக்கொள்ள ஆரம்பித்தன. தொடர்ந்து இரண்டும் முட்டிக்கொண்டு இரத்தம் வழிவதைப் பார்த்த ஒரு குள்ளநரி ஆடுகளை சாப்பிடுவதற்காக ஒரு தந்திரம் செய்தது. திடீரென பதறி ஓடிவருவது போல் குள்ளநரி நடித்து, ''அய்யோ ரத்தம் இப்படி வழிகிறதே. இரு நான் நாக்கால் நக்கி நிறுத்துகிறேன்'' என்று சொல்லி அவற்றின் சண்டையை நிறுத்தி, ஓர் ஆட்டின் தலையை நக்க ஆரம்பித்தது. இரத்தச் சுவை நாக்கில் பட்டதும் தன்னை அறியாமல் இரத்தத்தை உறிய ஆரம்பித்தது.



இரத்தத்தை உறிய உறிய, அந்த ஆடு மயங்கி விழுந்தது. அப்போது குள்ளநரியின் தந்திரத்தைப் புரிந்துகொண்ட மற்றொரு ஆடு, ''அடடே நமது நண்பனைக் கொன்று இவன் நம்மையும் கொன்று விடுவானே'' என்று உணர்ந்தது. உடனே வேகமாய்ப் பின்னாலிருந்து பாய்ந்து நரியின் வயிற்றில் தன் கொம்பால் குத்திக் கிழித்தது. உடனே குள்ளநரி அலறி ஓட, ஆடு தன் மயங்கிய நண்பனை தூக்கிக்கொண்டு மந்தைக்குள் சென்றது. இரண்டு ஆடுகளும் கடைசி வரை நண்பர்களாக வாழ்ந்தன.



வி.தமிழ்,
6-ஆம் வகுப்பு

## குழந்தைகளுடன் பணிபுரிவது எனக்குக் கிடைத்த வரம்

கொருக்குப்பேட்டை மண்டலத்தில் ஊக்குநராகப் பணி செய்கிறேன். நான் நேரு நகர், கருமாரியம்மன் நகர், கண்ணகி நகர் என மூன்று பகுதிகளில் பணி செய்கிறேன். முதன்முதலில் நான் அருணோதயா தையல் பள்ளியில் பயிற்சி பெற்றேன். அதிலிருந்து பகுதி நேர பணியாளராகப் பள்ளியில் பணி செய்தேன். குழந்தைகள் மத்தியில் மன நிறைவோடு பணி செய்தேன். பிறகு களப் பணியில் இறங்கினேன்.

குழந்தைகள் மத்தியில் பணி செய்வது எனக்கு மிகவும் பிடிக்கும். இந்த பணியில் எனக்கு நிறைய பயிற்சி அளிக்கப்பட்டது. பேச்சாற்றல் பயிற்சி, குழந்தைகள் உரிமை, குழந்தைகள் பங்கேற்பு, பணியாளர் பயிற்சி போன்ற அனைத்து பயிற்சிகளையும் பெற்று பயனடைந்தேன். ஒவ்வொரு பகுதியிலும் குழந்தைகளின் திறன்களை வெளிக்கொணர்ந்து, அவர்களை மாண்போடும் மகிழ்வோடும் உருவாக்குவது என்னுடைய பணி. இது மட்டுமன்றி குழந்தைகளைப் பங்கேற்க வைப்பது, குழந்தைகளின் உரிமையைப்பற்றி அவர்களுக்குத் தெளிவுபடக் கூறுவது, எல்லா தளங்களிலும் அவர்களைப் பங்கேற்க வைப்பது, கல்வியில் சிறந்து விளங்கச் செய்வது, கலைப் பயிற்சி திறன் கொடுப்பது, தலைமைத்துவப் பயிற்சியினைக் கொடுத்து இளம் வழிநடத்துநராக அவர்களை உருவாக்கி, குழந்தைகளை மேம்படச் செய்வது ஆகியவற்றை எனது நோக்கமாகக் கொண்டு மனநிறைவோடு பணி செய்கிறேன்.



குழந்தைகள் பங்கேற்புத் திட்டத்தில் நான் பணிபுரிவதால் எனது குழந்தைகளையும் உரிமையும் பங்கேற்பும் கொடுத்து வளர்க்கிறேன். கணவரை இழந்ததோடு எனது வாழ்க்கை முடிவடைந்தது என்று நினைத்திருந்தேன். அருணோதயா குழந்தைகளுடன் பணிபுரிய வாய்ப்பு கிடைத்தது எனக்கு ஒரு வரமாக இருந்தது.

**-லோகநாயகி, ஊக்குநர், அருணோதயா**

# நாங்களும் விஞ்ஞானிகளே!



அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியே, இந்த நாங்களும் விஞ்ஞானிகள் நிகழ்ச்சிதான். இதில் பல குழந்தைகள் தங்களின் திறமைகளை வெளிகாட்டினார்கள்.

அதில் சில குழந்தைகள் பரிசு பெற்றனர். சில குழந்தைகள் தங்கள் பகுதியில் இருக்கும் பிரச்சனைகளை சில திட்டத்தின் மூலம் கண்காட்சியாக வைத்தனர்.

மே 3 அன்று இராயபுரத்தில் உள்ள ஸ்ரீ பேலஸ் அரங்கத்தில், 'சமூக மாற்றத்தில் குழந்தை விஞ்ஞானிகள் பங்கு' என்ற தலைப்பில் அறிவியல் கண்டுபிடிப்புகளின் கண்காட்சி நடைபெற்றது. இக்கண்காட்சியை 200க்கும் மேற்பட்ட குழந்தைகள் கண்டுகளித்தனர்.

முதல் 3 இடங்களைப் பிடித்த கண்டுபிடிப்புகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. அவற்றைக் கண்டுபிடித்தக் குழந்தைகள் அனைவருக்கும் 'குழந்தை விஞ்ஞானிகள்' என்ற பட்டமும், சான்றிதழ்களும், அறிவியல் புத்தகங்களும் வழங்கி சிறப்பிக்கப்பட்டன.

## குழந்தை விஞ்ஞானியின் அனுபவப் பகிர்வு

அனைவருக்கும் வணக்கம்!

எனது பெயர் மா.ஹரிபிரியா நான் அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் நான்கு வருடமாக உள்ளேன். அருணோதயா மூலம் இளம் வழிநடத்துநர் பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி போன்ற எண்ணற்ற பயிற்சிகளில் கலந்துகொண்டேன். அதன் மூலம் பல திறமைகளை வளர்த்துக்கொண்டேன். அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளிலும் பங்கேற்பேன். சங்க நிகழ்வுகளில் பங்கேற்பது எனக்கு மிகவும் பிடிக்கும். அப்படித்தான் நானும் என் தம்பியும் அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் நடைபெற்ற குழந்தை விஞ்ஞானிகள் நிகழ்விலும் பங்கேற்றோம். நானும் எனது தம்பி சந்தோஷும் ஒரு புதிய திட்டத்தைக் கண்டுபிடித்தோம்.



எங்கள் பகுதியில் குப்பைமேடு உள்ளது. அங்கு குப்பைகளை எரிப்பார்கள். அந்த புகையினால் எங்கள் பகுதி மக்கள் சுவாசக்கோளாறினால் அவதிப்பட்டு வருகின்றனர். இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் வகையில், குப்பைகளை எரிக்கும்போது வரும் புகையில் இருந்து பேனா மை தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தோம். குப்பையை எரிக்கும்போது வெளிவரும் புகையில் இருந்து அப்பகுதி மக்களைக் காப்பாற்றவும், குழந்தைகளுக்குப் பேனா மையாகப் பயன்படும் வகையிலும் இருந்த எங்கள் கண்டுபிடிப்பு மூன்றாம் இடத்தைப் பிடித்தது. எங்கள் பெற்றோர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

**H. யுவஸ்ரீ**
**11ஆம் வகுப்பு ,**





# அத்திப்பட்டில் அருணோதயா குழந்தைகள் சங்கத்தின் பணிகள்

பத்தாவது வரைதான் படிச்சிருக்கேன். 2004-இல் அருணோதயா சங்கமானது திருவொற்றியூர் சத்திய மூர்த்தி நகரில் மகளிர் குழுக்களை உருவாக்கியது. அதில் ஒரு குழுவான நாகாத்தம்மன் குழுவில் இணைந்து செயலாளர், பொருளாளராக செயல்பட்டேன். அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் எனது இரண்டு பெண் குழந்தைகளையும் சேர்த்து விட்டேன். அவர்கள் இன்று உயர்கல்வி படித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு காரணம் அருணோதயா குழந்தைகள் சங்கம்தான்.

அருணோதயா சங்கத்தின் மூலம் இலவசமாகத் தொழில் முனைவோர் பயிற்சிகளைப் பெற்றேன். 2014-இல் அருணோதயா மூலம் டெய்லரிங் கற்றுக்கொடுக்கும் வேலையில் ஈடுபட்டேன்.

இந்த சமயத்தில்தான் அருணோதயா சங்கமானது, அத்திப்பட்டு பகுதியில் உள்ள இருளர்கள் வாழ்வில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் ஊக்குநராகப் பணியமர்த்தி, என்னை அங்கே அனுப்பிவைத்தது.



**வெளியிடங்களுக்கு செல்லாத அவர்களை பல இடங்களுக்கு கூட்டிச்சென்று கல்வியின் முக்கியத்துவத்தை அந்த குழந்தைகளிடம் ஏற்படுத்தி இருக்கிறோம்**

அத்திப்பட்டில் உள்ள இருளர் மக்கள் சாலையில்தான் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு என்று வீடு கிடையாது. அரசின் எந்தவித ஆதாரங்களும் அவர்களிடம் கிடையாது. இதனால் அவர்களுடைய குழந்தைகளை பள்ளிகளில் சேர்க்காமல் இருந்தார்கள். அங்கே அருணோதயா குழந்தைகள் சங்கம் மூலம் அந்த குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழ், ஆதார் அட்டை, சாதிச் சான்றிதழ் என ஒவ்வொன்றையும் போராடி வாங்கிகொடுத்தோம். இதனால் அந்த குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்பட்டு இப்போது படித்துக்கொண்டிருக்கிறார்கள்.

வெளியிடங்களுக்குச் செல்லாத அவர்களை பல இடங்களுக்குக் கூட்டிச்சென்று கல்வியின் முக்கியத்துவத்தை அந்த குழந்தைகளிடம் ஏற்படுத்தி இருக்கிறோம். இங்கிருக்கும் குழந்தைகளில் பலர் பத்தாவது பெயிலாகி இருந்தார்கள். அவர்களுக்கு சங்கத்தின் மூலம் ஆலோசனை கொடுத்து அவர்களைத் தேர்வு எழுத வைத்துள்ளோம். இதனால் அங்கே இப்போது மூன்றுபேர் நர்சிங், இரண்டு பேர் பட்டப்படிப்பு, ஒருவர் பாலிடெக்னிக் சென்று படித்துக்கொண்டிருக்கிறார்கள். பத்தாவது வரை படித்த என்னை இக்குழந்தைகள் மிஸ் என்று அழைக்கும் அளவிற்கு தகுதிப்படுத்திக் கொண்டுள்ளேன். இந்தக் குழந்தைகளிடம் அசாத்திய திறமை உள்ளது.

வீடில்லா அப்பகுதி மக்களுக்கு அருணோதயா சங்கம் மூலம் வீடுகட்டுவதற்கு இடம் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். இதனால் அந்த குழந்தைகளுக்கு அழகிய வீடு கிடைக்கும். இன்னும் பல்வேறு பணிகளின் மூலம் அந்த மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறேன். இதற்கெல்லாம் ஆதாரமாக இருந்தது அருணோதயா சங்கம்தான்.

வாழ்வில் நான் எப்போதெல்லாம் எனக்கு யாருமே இல்லை. தனித்துவிட்டப்பட்ட ஆள் என்ற சூழல் வரும்போதெல்லாம் என்னுடன் பணியாற்றும் அருணோதயா சகோதரிகளும், அந்த சங்கத்தின் இயக்குநர் மேடமும் நாங்கள் இருக்கிறோம் என்று எனக்கு நம்பிக்கை தந்துகொண்டே இருந்தார்கள். நாங்கள் அதே நம்பிக்கையை அருணோதயா குழந்தைகள் சங்க உறுப்பினர்களுக்குத் தந்து கொண்டிருக்கிறோம்.

**ரா.ஜோதி, ஊக்குநர், அருணோதயா**




# பறக்கும் யானையும் பேராசையின் நஷ்டமும்

ஒரு ஊரில் ஓர் ஏழை விவசாயி இருந்தார். அரசாங்கம் அவர் மேல் இரக்கம் கொண்டு அதுவரை பயிர் செய்யாத தரிசு நிலத்தைக் கொடுத்தது. அவர் அதைச் சமன்படுத்தி, வரப்பு வெட்டி, புல், பூண்டு பிடுங்கி, இரவு பகலாய்ப் பாடுபட்டு முதல் முறையாக நெல் பயிரிட்டு மகிழ்ந்தார்.

ஒருநாள் இரவு பறக்கும் தேவலோக யானை ஒன்று நெல்மணிகளைத் தின்று கொண்டிருப்பதை யாரோ ஒருவர் பார்த்துவிட்டு அவ்விவசாயிடம் சொல்ல, அவர் வயலுக்குச் சென்று அந்த தேவலோக யானையின் வாலைப் பிடித்து முறுக்கினார்.

வாலைப்பிடித்ததும் யானை பறக்க ஆரம்பித்தது. கூடவே அந்த விவசாயியும் பறக்க ஆரம்பித்தார். பிறகு அது கடவுள் முன் நின்றது. அப்போது விவசாயி கடவுளிடம் நடந்ததைச் சொல்லி நஷ்டஈடு கேட்டார். கடவுள், ''இன்று முதல் நீ விவசாயி இல்லை. பெரிய பணக்காரன். தரிசு நிலத்தை உழுது பசுமையாக்கி உழைத்த உனக்கு எல்லா பொன்னும் பொருளும் அளிக்கிறேன்'' என்று வரம் அளித்தார். விவசாயி கடவுளுக்கு நன்றி கூறினார்.

ஊரில் இருக்கும் மற்ற பணக்காரர்களுக்கும் இந்தச் செய்தி பரவியது. பணம் பெற விரும்பிய நான்கு பணக்காரர்களும் நடு இரவில் வயலுக்குச் சென்று தங்கி இருந்தனர். பறக்கும் தேவலோக யானை வந்து, அவர்களின் வயலில் நெல் மணிகளைச் சாப்பிட ஆரம்பித்தது. அப்பொழுது ஒரு பணக்காரர் அதன் வாலை பிடித்தவுடன் யானை பறக்க ஆரம்பித்தது. உடனே வாலைப் பிடித்துக் கொண்டிருப்பவனின் காலை இன்னொருவன் பிடித்துக்கொள்ள, அவன் காலை இன்னொருவன் பிடிக்க, இப்படி சங்கிலி மாதிரி நான்கு பேரும் பிடித்துக் கொள்ள யானை வானில் பறந்து கொண்டிருந்தது.

கீழே இருக்கும் ஒருவன், யானையின் வாலைப் பிடித்திருப்பவனிடம் ''உனக்கு எவ்வளவு கொடுத்தால் போதும்'' என்று கேட்டான். அதற்கு அவன் உணர்ச்சிவசப்பட்டு வாலை விட்டுவிட்டு ''இவ்வளவு...'' என்று இரு கைகளையும் விரித்துக் காட்ட 'தொபீர்' என வானிலிருந்து எல்லோரும் கீழே விழுந்து, எலும்புகள் நொறுங்கியதால் மயங்கினர். பறக்கும் தேவலோக யானை சொன்னது ''பாடுபட்டவனுக்கு பரிசாய் ஆதாயம் தந்தேன். பேராசைப் பட்டவனுக்குக் காயம் தந்தேன்.''



R. ஏழுமலை,
5-ஆம் வகுப்பு



# அருணோதயா குழந்தைகள் சங்கம் எனக்கு என்ன செய்தது?

எனது பெயர் கருணாகரன். நான் 13 வருடமாக அருணோதயாவுடன் தொடர்பில் இருக்கின்றேன். அருணோதயா கணினி இலவசப் பயிற்சிக்குச் சென்றேன். திரு. போஸ் சார் அவர்கள் மூலமாக, எனது 16வது வயதில் குழந்தைகள் சங்கத்தில் இணைந்தேன். அதன் மூலம் எனது திறமைகளை வளர்த்துக்கொண்டேன்.

குழந்தைகள் சங்க பகுதி தலைவர், மண்டல தலைவர், சிட்டெறும்பு இதழின் ஆசிரியராக இருந்துள்ளேன். 18 வயதிற்குப் பிறகு அருணோதயா புதுமை இளைஞர் இயக்கத்தில் உறுப்பினராக இணைந்தேன். பகுதி அளவில் இளைஞர் குழு தலைவராகப் பொறுப்பேற்று, பல முன்னேற்றப் பணிகளைச் செய்து, சென்னை மாவட்ட அளவில் சிறந்த இளைஞர் இயக்கம் என்ற பாராட்டைப் பெற்றுள்ளேன். நேரு யுவகேந்திரா மூலம் விருது மற்றும் ருபாய் 25 ஆயிரம் காசோலை பெற்றுள்ளேன்.

பகுதியளவில் சிறப்பாகச் செயல்பட்டதால் அருணோதயா புதுமை இளைஞர் இயக்கம் நாடாளுமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அனைத்து இளைஞர் இயக்கத்திற்கும் பொறுப்பேற்று சிறப்பாக வழி நடத்தினேன்.

இன்று ஓர் என்ஜினியராகப் பட்டபடிப்பு முடித்து, சோலார் சிஸ்டம் தயாரிக்கும் நிறுவனம் வைத்து, 12 இளைஞர்களுக்கு வேலை கொடுத்து வருகிறேன்.

இப்போது அருணோதயா விதை நெல் குழுவில் இணைந்து, அதில் கிடைத்த பயிற்சிகள் மற்றும் அனுபவங்களை என் ஓய்வு நேரங்களில் அருணோதயா குழந்தைகள் சங்க குழந்தைகளிடம் பகிர்ந்து வருகிறேன்.

இவற்றுக்கெல்லாம் வாய்ப்பளித்த அருணோதயாவின் இயக்குனர் முனைவர் வர்ஜில் டி சாமி மேடம், திருமதி கலா மிஸ் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விதை நெல்லாக இருந்து குழந்தைகளின் விளையாடும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் ப்ரிஸ்பீ விளையாட்டைப் பயிற்றுவித்து வருகிறேன்.


கொருக்குப்பேட்டை மற்றும் திருவொற்றியூர் பகுதிகளில் 50 குழந்தைகள் ஆர்வமுடன் விளையாடி வருகின்றனர். போட்டிகளில் கலந்து கொள்ளவும் தயராகி வருகின்றனர். புதுமை இளைஞர் இயக்கம் உறுப்பினர்களை நேரு யுவகேந்திராவில் இணைத்து அங்கு கிடைக்கும் சலுகைகளை இளைஞர்களுக்குப் பெற்றுகொடுக்க ஆவண செய்து வருகின்றேன்.



இந்த திறன்களை நான் வளர்த்து கொண்டதிற்கு முக்கிய காரணம் அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் நான் பெற்ற பயிற்சி மற்றும் அங்கு கொடுக்கப்பட்ட வாய்ப்புகளே. நன்றி!

படித்ததில் பிடித்தது!

# யார் புத்திசாலி



ஒரு பணக்காரக் கிழவர் தனது மூன்று பிள்ளைகளின் பகுத்தறிவை சோதிக்க விரும்பினார். தனித்தனியாக வசித்து வரும் ஒவ்வொருவரையும் அழைத்து, மூவருக்கும் சமமான அளவு பணத்தைக் கொடுத்து, ''ஒரு நாள் கழித்து நான் வந்து பார்ப்பேன். இந்தப் பணத்தைக் கொண்டு நீங்கள் வாங்கியவற்றால் வீடு நிறைந்து இருக்க வேண்டும்'' என்றார்.

ஒரு நாள் கழித்து ஒவ்வொரு மகன் வீட்டிற்கும் சென்றார். முதல் மகன் தனது பணத்தைச் செலவழித்து விட்டு, மீதிப் பணத்தில் வீடு நிறைய வைக்கோலை வாங்கி நிரப்பி இருந்தான். இரண்டாவது மகன் விலையுயர்ந்த பொருள்களை வாங்கி வீட்டை நிறைத்து விட்டு கையில் பணமின்றி இருந்தான்.

மூன்றாவது மகன் பணத்தை வங்கியில் போட்டுவிட்டு, ஒரு ரூபாய்க்கு ஒரு அகல் விளக்கை வாங்கி தனது குடிசைக்குள் ஏற்றி வைத்து வெளிச்சத்தை வீடு முழுக்க நிறைத்து இருந்தான்.

மூன்றாவது மகனின் செய்கையால் தந்தையின் மனம் குளிர்ந்தது. அவர் மகிழ்ந்து பாராட்டி நிறைய பணத்தை அவனுக்கு அளித்தார்.

M. திவ்யா,
9-ஆம் வகுப்பு,





# பள்ளி குழந்தைகள் மன்றம்

பள்ளி குழந்தைகள் மன்றமானது எங்களுடைய தலைமைத்துவத்தை வளர்த்துக்கொள்ளவும், பள்ளி சுற்றுச்சூழலை சரி செய்யவும், பள்ளியின் உள் கட்டமைப்பைச் சீர் செய்யவும், பள்ளியை எங்களுக்கு ஏற்ற சூழலாக மாற்றிக் கொள்ளவும், பள்ளியில் எங்கள் பங்கேற்பை உறுதி செய்யவும் பயன்படும் ஒரு தளமாக உள்ளது.

பள்ளி குழந்தைகள் மன்றத்தில் மொத்தம் 32 குழந்தைகள் உள்ளனர்.

- பள்ளிக் குழு
- சுற்றுச்சூழல் குழு
- சத்துணவுக் குழு
- பாதுகாப்புக் குழு

நான் பாதுகாப்புக் குழுவிற்குத் தலைவராக உள்ளேன். இதில் நாங்கள் சில தீர்மானங்களை எடுத்து உள்ளோம்.

**தீர்மானங்கள்**

- பள்ளியில் போதைப் பொருட்கள் விற்பதைத் தடுக்க வேண்டும்.
- காலையிலும் மாலையிலும் போக்குவரத்துக் காவலர் எங்கள் பள்ளிக்குத் தேவை.
- பள்ளி நாட்களில் பேருந்து தனியாக விட வேண்டும்.
- ஆண் குழந்தைகளுக்குக் கழிவறை தனியாகக் கட்டி தருவதற்குப் பேசப்பட்டது.
- பள்ளியின் அருகே சுற்றுசுவர் சரி செய்து தர பேசப்பட்டது.
- பள்ளி குழந்தைகள் மன்றத்தில் பங்கேற்க வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி!

S.ஜிஷ்ணு,
8-ஆம் வகுப்பு







